விலை: 30.00
பக்கங்கள் : 12+12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com Valampurii

சங்கு 23
ஒலி 021 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை (09.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் போராட்டங்களை முன்னெடுக்கத் தயார்

வடக்கு, தெற்கு மீனவ அமைப்பு கூட்டாகத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக தலைநகர் கொழும்பில் போராட்டங்களை 11

சஜித் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்துக்கு விஜ 11

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு தொழில் நிமித்தம் சென்ற இளைஞன் மாயம்

11

முல்லையில் குடும்பப் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள் 11

ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும் வரை சர்வதேசம் இலங்கையை கண்டுகொள்ளாது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(குருநாகல்)

இலங்கையில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும்வரை சர்வதேசம் இலங்கையை கண்டுகொள்ளாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் மோசடிகள், போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக நடவடிக்கை 11

பணத்தை அச்சிட்டு நிவாரணம் வழங்குவதால்

குறைந்த வருமானம் பெறுவோரே அதிகம் பாதிக்கப்படுவர் - கம்மன்பில

(கொழும்பு)

பணத்தை அச்சடித்து நிவாரணம் வழங்குவதால் ஏற்படும் பணவீக்கம் குறித்து அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மேலும், அரசின் வருவாய் அதிகரிக்கப் 11

பெரும்போக பயிர்ச்செய்கைக்காக

இராணுவத்தை வயலில் இறக்கும் கோட்டாபய

(கொழும்பு)

சேதன பசளை பயன்பாடு தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் இராணுவத்தை பெரும் போக பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடுத்தப் போவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொனராகலை - சியம்பலாண்டுவ பகுதியில் விவசாயிகளை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தன்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் எனவும், நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதே தனது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

கொரோனா 13 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 11

மாலை 6 மணிக்கு முன் உணவைத் தயாரியுங்கள்

மின்சார சபை பொது முகாமையாளர்

(கொழும்பு)

மின்சார அடுப்புகளைப் பயன்படுத்தி சமைக்கும் நுகர்வோர் மாலை 6 மணிக்கு முன்னதாக உணவைத் தயாரிக்குமாறு இலங்கை மின் 11

முல்லையில் மர்மக் கப்பல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் மர்மப் பொருள் போன்ற பாரிய கப்பல் ஒன்று கரை 11

ஆரியகுளத்தை வைத்து அரசியல் வேண்டாம்

ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரியகுளத்தில் என்ன விடயத்தை நான் கேட்டேன் என்பதை அறியாமல் ஆரியகுளத்தை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில்அவர் மேலும் தெரிவிக்கை 02

கொழும்பை வந்தடைந்தார்

சீன வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட வேலைக்கு ஆள் தேவை

யாழ். பலாலியில் உள்ள விவசாயப் பண்ணைக்கு
தோட்ட வேலையில் அனுபவம் உள்ள ஆண்கள் தேவை.

- தங்கிநின்று வேலை செய்வதற்கு உணவு, தங்குமிடம் இலவசம்.

மாதச் சம்பளம் 45,000/=

(9483)

தொடர்பு : 077 687 1891

காணி விற்பனைக்கு

பிரம்படி லேன் 2 ஆம்
ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
(வெட்டுக் கிணறு)

(C-3476)

076 702 3565

கோல்டன் ஈகிள் கே.ரீ பிறைவேட் லிமிடெட்

கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

O/L படித்த நல்ல தேக ஆரோக்கியமுள்ள 5' 4" உயரம், 22 வயது முதல் 60 வயதிற்குட்பட்டவர்கள் நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கவும்.

10.01.2022 தொடக்கம் 13.01.2022 வரை
காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

தேவையான ஆவணங்கள்

- ஆள் அடையாள அட்டைப் பிரதி
- பிறப்புச் சான்றிதழ் பிரதி
- கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் மூலப்பிரதி
- கல்விச் சான்றிதழ்கள்

குறிப்பு : சம்பள நிர்ணய சபையால் விதிக்கப்பட்ட ஊதியமும் அத்துடன் EPF+ ETF 15% வழங்கப்படும்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய இடங்களில் பதவி வெற்றிடங்கள் உண்டு.

(C-3471)

இல. 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
076 788 9083, 021 567 2084

ஆரியகுளத்...

யில்,

யாழ்ப்பாணம் நாக விகாராதிபதியால் ஆரியகுளத்தில் மத நல்லிணக்க மண்டபம் ஒன்றை அமைத்து தருமாறு மாநகரசபையிடம் கோரிக்கை விடப்பட்டது. அதனை அவர்கள் மறுத்து விட்டார்கள்.

நான் யாழ். மாநகர முதல்வரிடம் ஆரியகுளத்தில் அதிகாலை வேளையில் உடற்பயிற்சி மற்றும் யோகாவை மேற்கொள்பவர்களுக்கு இலகுவாகவும் மத நல்லிணக்கத்தின் ஓர் அங்கமாக மதங்களின் பாடல்களை இசைப்பதற்கும் எனது விருப்பத்தை தெரிவித்தேன்.

நான் ஆரியகுளத்தில் பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளப் போகிறேன், மத அடையாளங்களை நிறுவப் போகிறேன் என்ற பொருள் கோடலில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

ஆரியகுளம் யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ளதால் அதிகாலை வேளையில் உடற்பயிற்சி செய்பவர்கள் யோகா செய்பவர்கள் ஒன்றுகூடும்போது இறையியல் பாடல்களை ஒலிப்பது மன அமைதியை ஏற்படுத்தும் என்ற நோக்கத்திலேயே முதல்வரிடம் கூறினேன்.

ஆரியகுளத்தில் மதங்களின் இறையியல் பாடல்களை இசைப்பது மத குரோதங்களை ஏற்படுத்தாது. இதை அரசியலாக்குபவர்களால்தான் தேவையற்ற குழப்பம் ஏற்படுகிறது. மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஆரியகுளம் மட்டும்தான் இடம் அல்ல. நான் எனது செயற்பாட்டில் உறுதியாக இருக்கிறேன் என்றார்.

(ம-18,33,104)

அலுவலக உதவியாளர் தேவை

தனியார் அலுவலகம் ஒன்றில்
பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை.

(9478)

075 572 9715

பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்கு
பணிப்பெண் தேவை.
தென்மராட்சியில் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது.

(9476)

077 572 9724

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த 4 இல் சூரி. செவ். உடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

077 513 9399
077 968 7705

(9470)

VACANCY

Staff wanted for a worldwide frontline and famous online marketing entity to work in customer service unit.

- **Fluent in spoken English**
- **Data entry skill with speed keyboard typing are expected.**
- **Having software knowledge is preferred.**

Staff can work from home.
Those who are interested please send your bio data/curriculum vitae to the email address **jobinfojaffna@gmail.com.**
Closing date is 14.01.2022.

(C-3474)

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)

நடாத்தும்

ஒன்றுகூடலும் இராப்போசனமும்

(KHC NIGHT - 2021)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்விகற்று வெளியேறிய பழைய மாணவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் கல்லூரி நினைவுகளை நினைவுகூரும் முகமாகவும், பழைய மாணவர்களிடையே புரிந்துணர்வினை வளர்க்கும் முகமாகவும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச் சங்கத்தினால் ஒன்றுகூடலும், இராப்போசன நிகழ்வும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்விற்கு கல்லூரியில் கல்விகற்று வெளியேறிய சகல பழைய மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளமுடியும்.

காலம் :- 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மாலை 4.00 மணி
இடம் :- கல்லூரி வளாகம்

எனவே இந் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புகின்ற பழைய மாணவர்கள் எதிர்வரும் 2022.01.25 ஆம் திகதிக்கு முன்னராக தங்களது பதிவுகளை பின்வருவோருடன் தொடர்புகொண்டு மேற்கொள்ளமுடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு :-

தலைவர்	:-	திரு. வி.தயாபரன்	077 608 0926
செயலாளர்	:-	திரு. பா.செந்தில்குமார்	077 611 6453
பொருளாளர்	:-	திரு. தே.றொபேசன்	077 474 4414

மேலும் ரிக்கற்றுகளை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

- கல்லூரியில் :- பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில்
- விற்பனை நிலையங்கள் :-
  - ஹரிகணன் அச்சகதாரர் - கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
  - மங்களா காட்சியகம் - கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
  - மலாயன் கபே - யாழ்ப்பாணம்.
  - செல்வா மின்சார நிலையம் - திருநெல்வேலி சந்தி.
  - சாருஜன் தொலைத் தொடர்பு நிலையம் - கே.கே.எஸ் வீதி,கொக்குவில் சந்தி
  - Fine Selection - சுன்னாகம்

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)

(C-3475)

istore.lka

iStore

EXPERINCE IN CUSTOMER MANAGEMENT

BASIC SALARY + OTHER AOLLOWANCE

CAREER OPPORTUNITY
at iStore (Pvt) Ltd.

RECEPTIONIST

2 Years Experience Required
Age Between 20 - 28

No.3412, Kasthuriyar Road, Jaffna.

RECEPTIONIST

SEND YOUR CV VIA WHATSAPP

VISIT OUR WEBSITE: WWW.APPLEISTORE.LK

(9484)

CALL US: +94 771 636 848

கண்ணீர் அஞ்சலி

எமது சக மருத்துவப் பிரதிநிதி

கிருபானந்தன் நிஷாந்தன்

தோற்றம் :01.12.1986
மறைவு : 07.01.2022

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்

(9485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும் 18 ஆம் திகதி

தேசிய வளங்களைப் பாதுகாக்க பாராளுமன்றத்தை சுற்றிவளைப்போம்

ஒன்றிணைந்த தொழிற்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகள் தொடர்பில் புதிதாக கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தம் நாட்டை காட்டிக் கொடுக்கும் செயற்படாகும். தேசிய வளங்களைப் பாதுகாக்க எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தை சுற்றிவளைப்போம் என துறைமுகம், பெற்றோலியம், மின்சாரம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்கும் ஒப்பந்தம் திருட்டுத்தனமான முறையில் கைச்சாத்திடப்பட்டதால் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்துகிறோம் என மக்கள் மத்தியில் தேசப்பற்றாளரைப் போன்று கருத்துரைத்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அதே திருட்டுத்தனமான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளார்.

திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகள் தொடர்பில் இந்திய நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ள புதிய ஒப்பந்தம் நாட்டைக்காட்டிக் கொடுக்கும் செயற்பாடாகும். இந்த ஒப்பந்தத்தினால் இலங்கைக்கு ஒரு டொலர் கூட கிடைக்கப் பெறாது.

500 மில்லியன் டொலர் கடன் அடிப்படையில் கிடைக்கப் பெறுகிறது. அதனை வட்டியும், முதலுமாக மீளச் செலுத்த வேண்டும். பல பில்லியன் பெறுமதியான திருகோணமலை எண்ணெய்த்தாங்கிகள் மீண்டும் 50 வருட காலத்திற்கு இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தம் எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் நிச்சயம் பாராளுமன்றத்தை சுற்றிவளைப்போம்.

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால்ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலைமையை சர்வதேச நாடுகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

தேசிய வளங்களைப் பணயம் வைத்து அரசாங்கம் அரச நிர்வாகத்தை முன்னெடுத்து செல்கிறது. தேசிய வளங்களை பாதுகாக்க தொடர் போராட்டத்தில் ஈடுப்படுவோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

சாரதி அனுமதிப் பத்திரங்களின் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காலாவதியாகும் தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன சட்டத்துக்கமைய போக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் "2021 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 2022 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் காலாவதியாகும் சகல சாரதி அனுமதிப்பத்திரங்களினதும் செல்லுபடியாகும் காலம் காலாவதியான தினத்திலிருந்து ஆறு மாத காலப் பகுதிக்கு நீடிக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

மரண அறிவித்தல்

தோற்றம் 17.04.1957

மறைவு 07.01.2022

திருமதி.விஜயலட்சுமி சிவபாதசுந்தரம்

யாழ்ப்பாணம் தலையாழியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி.விஜயலட்சுமி சிவபாதசுந்தரம் (07.01.2022) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணேசு சிவபாதசுந்தரம் (உரிமையாளர், காமாட்சி களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னராசா (ராஜா கிறீம் கவுஸ்) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசு சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், மகேசன், காலஞ்சென்ற கமலநாதன், கமலாதேவி, சத்தியமூர்த்தி (UK), சண்முகானந்தன், சத்தியசீலன், காலஞ்சென்ற குமாரதாஸ், சத்தியலக்ஷிமி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மீராஜினி (UK) , திபாகினி, சுபாஜினி, பிரசாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபிகரன் (UK), சிந்துஜன் (பொறியியலாளர்), கௌசிகன் (பொறியியலாளர்- RDD) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்னி, கனிகன், சுகானி, சதுன், ஆகர்ஷினி, அக்ஷிதன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், செல்வராசா மற்றும் இந்திராணி (Germany), மகேந்திரன், ராசேந்திரன் (Germany) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1010 /30, தலையாழி லேன்,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9468)

தகவல்: குடும்பத்தினர்
076 541 5018
077 794 9246
077 652 5349

காணிகள், கடைகள், வீடுகள் வாங்க விற்க

- யாழ். நகரப் பகுதியில் 7 பரப்புக் காணி மேல்மாடி கட்டடத்துடன் (யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக - கடந்த வருடம் 1 பரப்பு 8 கோடி என வங்கியால் பெறுமதியிடப்பட்டது.)
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மெயின் றோட்டில் 1 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு, 3 1/2 பரப்பு புதிய வீட்டுடன்.
- நல்லூர் கோவில் வடக்கு வீதி, சங்கிலியன் வீதியில் 2 1/4 பரப்பு.
- யாழ். கைதடி ஏ9 வீதியில் 14 பரப்புக் காணி.
- யாழ். வேலணையில் 10 பரப்பு புகையிலைத் தோட்டக் காணி.
- யாழ். ஏ9 வீதியில் 1 1/2 ஏக்கர் வயல் காணி.
- வவுனியா நகரப் பகுதியில் மிகப் பிரபல்யமான இடத்தில் 6 பரப்புக் காணி.
- யாழ். இராச பாதை வீதியில் 40 பரப்பு காணி (பிரித்து வழங்க முடியும்.)
- வவுனியா ஏ9 வீதியில் (சாந்தசோலை) 30 பரப்புக் காணி.
- யாழ். நகர் IBC கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள வீதியில் 2 பரப்பு காணி.
- வவுனியா நகரப்பகுதியில் மிகப் பிரபல்யமான பகுதியில் 11 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்கு.
- வவுனியா நகரப்பகுதியில் கந்தசாமி கோவில் வீதியும் பஜார் வீதியும் இணைக்கும் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
- வவுனியா ஏ9 வீதியில் புதிய பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் 4 பரப்புக் காணி.
- வவுனியா நுழைவாயிலுக்கு அருகாமையில் 100 பரப்புக் காணி (பிரித்துக் கொடுக்கப்படும்.)
- ஏ9 வீதியில் இயக்கச்சி 30 ஏக்கர் காணி.
- ஏ9 கனகராயன்குளத்தில் 1 ஏக்கர் காணி.

(9471)

உடன் விற்பனைக்கு உண்டு.
வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களில் காணிகள் விற்க/ வாங்க தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு
VIMB, வங்களாவடி, வேலணை.
077 522 1132
077 493 4336
076 281 2188

தடுப்பூசி செலுத்தாததால் விசா ரத்து

ஜோகோவிச் ஆதரவாளர்கள் செர்பியாவில் ஆர்ப்பாட்டம்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்னில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகள் அனைவரும் கட்டாயம் கொரோனாத் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும் டென்னிஸ் உலகின் நம்பர்வன் வீரருமான 9 முறை அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றவருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டாரா? இல்லையா? என்பது குறித்து தெரிவிக்க தொடர்ந்து மறுத்து வந்தார். இதனால் அவுஸ்திரேலிய ஓபனில் அவர் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது. அவர் போட்டியில் இருந்து விலகக்கூடும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே நோவக் ஜோகோவிச் தனக்கு தடுப் பூசி போடுவதில் இருந்து விலக்கு கிடைத்திருப்பதாக கூறி அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டுச் சென்றார். ஆனால் அவர் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் விமான நிலையத்தை அடைந்த போது, அவரது விசா ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். இதனால் அவர் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நோவக் ஜோகோவிச்சுக்கு ஆதரவாக செர்பிய மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தலைநகர் பெல்கிரேடில் உள்ள அந்நாட்டு பாராளுமன்றத்துக்கு முன்பாக திரண்ட மக்கள், ஜோகோவிச்சின் விசாவை ரத்து செய்த அவுஸ்திரேலிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

அவுஸ்திரேலிய ஓபனில் ஜோகோவிச் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (4-6)

குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கேற்கப்போவதில்லை

வடகொரியா அறிவிப்பு

சீனாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கப் போவதில்லை என வட கொரியா தெரிவித்துள்ளது.

பகைமை உணர்வுகொண்ட நாடுகளின் செயல்களாலும் கொரோனாத்தொற்று அபாயம் காரணமாகவும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க முடியாது என சீனா வுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் அண்மையில் போட்டிகளுக்கு அதிகாரிகளை அனுப்பப் போவதில்லை என்று தெரிவித்தன. (4-6)

பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு நேற்று முன்தினம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம் :- கஜிந்தன்)

கால்பந்தாட்ட தொடர் இறுதிக்குள் வதிரி டயமன்ஸ்

கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

இதன் அரையிறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது. அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். 14 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் பிரியாங்கன் தட்டிக் கொடுத்த பந்தை அரவிந்தன் கோலாக்க 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் நவசக்தி அணியினர் பலமுறை முயற்சித்த போதிலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் வதிரி டயமன்ஸ் அணி இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. இதில் ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணி வீரர் அநுராகாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (4-90)

இந்தியாவிற்கெதிரான இரண்டாவது டெஸ்ட்; தென்னாபிரிக்கா வெற்றி

இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 1-1 என்ற கணக்கில் சமநிலை பெற்றுள்ளது.

ஜோகனஸ்பர்க்கில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 202 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி, 229 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து 27 ஓட்டங்கள் பின்னிலையில், தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 240 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதனால் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு 240 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

240 என்ற வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி, 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, நாளை மறுதினம் 11 ஆம் திகதி கேப்டவுனில் நடைபெறவுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீண்டும் களத்தில் இறங்கும் மைத்திரி பரபரப்பாகும் கொழும்பு அரசியல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பெறுவதற்கு சில முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டு ள்ளது.

எதிரணி உறுப்பினர்கள் குழுவின் ஆதரவுடன் பத வியை கைப்பற்ற அவர் திட்ட மிட்டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

இதேவேளை, எதிர்வரும் அமைச்சரவை மாற்றத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து அமைச் சர் களும் பதவியில் இருந்து நீக்க ப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

சுதந்திரக் கட்சி தற்போது இரண்டு அமைச்சரவை அமை ச்சுகளையும் இரண்டு இராஜா ங்க அமைச்சுகளையும் கொண் டுள்ளது. அத்தோடு, பாராளு மன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் 14 உறுப்பினர் களும் இருக்கின்றமை குறிப்பி டத்தக்கது. (நி-5)

ஜனாதிபதி கோட்டா தலைமையில் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு

(கொழும்பு)

நாட்டில் 74 ஆவது சுதந்திர தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகள் இம்முறை சுதந்திர தின நிகழ்வில் கல ந்துகொள்ளவுள்ளதுடன் அவர் களுக்கான அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது எனவும் உள்நாட் டலுவல்கள் அமைச்சின் செய லாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளு க்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கலந்து ரையாடல் நேற்று முன்தினம் கொழும்பு மாவட்ட செயலக கட்டடத்திலுள்ள உள்நாட்டலு வல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளைப் பார்வையிடு வதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும், கடந்த வருடங் களைப் போன்று வீதியில் இரு மருங்குகளிலும் இருந்து நிக ழ்வுகளைப் பார்வையிடு வதற்கு மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் உள்நாட்டலுவல்கள் அமை ச்சின் செயலாளர் மேலும் குறிப் பிட்டார். (நி-5)

மாலைதீவு கடற்பரப்பில் மீன்பிடி படகு கவிழ்ந்தது

ஐவர் மீட்பு, ஒருவர் மாயம்



(கொழும்பு)

மாலைதீவு கடற்பரப்பில் மீன்பிடி படகு ஒன்று கவிழ்ந்த தில் 6 இலங்கையர்கள் நீரில் மூழ்கியுள்ளனர்.

அவர்களுள் ஐவர் காப்பாற் றப்பட்டுள்ளதாகவும் ஒருவர் நீரில் மூழ்கி காணாமற்போயு ள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இந்தநிலையில் அவரை தேடும் பணிகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன. (நி-5)

சொய்சாபுர தொடர்மாடி குடியிருப்பில் தீவிபத்து

மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

சொய்சாபுர தொடர்மாடி குடி யிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயர்தர மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளி க்கிழமை பிற்பகல் கல்கிஸை பொலிஸ் பிரிவில் சொய்சாபுர தொடர்மாடி குடியிருப்பில் ஏற் பட்ட தீ விபத்தில் தீக்காயங்க ளுக்கு உள்ளான நிலையில் களுபோவில மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்ட மாண வனே இவ்வாறு உயிரிழந்து ள்ளதாக பொலிஸ் ஊடக ப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 19 வயதுடைய மொறட்டுவ - சொய்சாபுர பகுதியைச் சேர்ந்த வராவார்.

தீ விபத்திற்கான காரணம் இன்றுவரை இனங்காணப் படாத நிலையில், கல்கிஸ பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தீ விபத்தில் உயிரிழந்த மாணவன் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி கற்பதோடு, பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள கல் விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் தோற்றவிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்பு மேலும் விரிவுபடுத்தப்படும்

தென்கொரிய பிரதமர்

(சியோல்)

கொரியாவில் இலங்கைய ர்களுக்கான வேலைவாய்ப்பை மேலும் விரிவுபடுத்துவதற் கான வழிகளை தென் கொரிய அரசாங்கம் தீவி ரமாக ஆராயும் என அந் நாட்டின் பிரதமர் உறுதி யளித்துள்ளார்.

சியோலில் கொரிய பிரதமருடனான சந்தி ப்பின் போது, வெளிநா ட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸி னால், "இலங்கைத் தொழிலாளர்களுக்கான வாய்ப்புக்களை அதிகரி க்குமாறு: விடுக்கப்பட்ட கோரி க்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித் தார். (நி-5)

சாவகச்சேரியில் டெங்கு தீவிரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார மருத் துவ அதிகாரி பணிமனை எல் லைக்குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனா நிலைமை ஓரளவிற்கு கட்டுப் பாட்டில் உள்ள போதிலும் டெங்கு நோய்ப் பரவல் தீவிரமடைந்தி ருப்பதாக சாவகச்சேரி சுகாதாரப் பகுதி சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தவகையில் தென்ம ராட்சியில் கடந்த டிசம்பர் மாதம் 12 டெங்கு நோயாளர்களும் - ஜனவரி மாத முதல் வாரத்தில் 3 டெங்கு நோயாளர்களும் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும் கடந்த காலத்தில் தென்மராட்சியை ஆட்டிப்படை த்த கொரோனா தொற்று தற் போது குறைவடைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(4-5-30)

அலுவலக வேலைவாய்ப்பு

கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை யில் இயங்கும் எமது சேவை நிறுவன கிளை க்கு Computer Billing மற்றும் Packing செய்யக் கூடியவர் தேவை.(வயது 18- 30 வரை) அடிப்படைச் சம்பளம் + Commission வழங்கப்படும்.

(நி-1575)

076 690 8967/ 077 715 2299

இராசிபலன்

09.01.2022
மார்கழி 25, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பிற்பகல் 4.47 மணிவரை

உத்திரட்டாதி பிற்பகல் 12.35 மணிவரை
சுபநேரம் -9.32-11.02 மணிவரை
இராகுகாலம் -5.02-6.32 மணிவரை

சந்திராஷ்டமம்: பூரம்

வளவன்

மேஷம்

வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட் களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

கடகம்

புகழ் மிக்கவர்களின் சந்தி ப்பு இடம்பெறலாம், முன் னேற்றம் பெற பெரிதும் பாடு படுவீர்கள், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

துலாம்

சுவாரஸ்யமான சம்பவங் கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எடுத்த காரியங் களில் முன்னேற்றம் காணும் நாள்.

மகரம்

உறவினர் வழியில் மகிழ் ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட் டம் விரிவடையும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடை க்கும், வழிபாடு சிறப்பினைத் தரும்.

ரிஷபம்

பிரபலமானவர்களின் அறி முகம் கிடைக்கும், இல் லத்தில் இனிய சம்பவங் கள் இடம்பெறும் வாய்ப் புண்டு, வீட்டு உபயோகப் பொருட் களை வாங்கும் வாய்ப்புண்டு.

சிம்மம்

நடப்பதெல்லாம் நன்மக்கே யென நினைக்க வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முருண்பாடுகள் தோன்றி மறையலாம், காரிய வெற்றி க்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

விருச்சிகம்

தொழில் நலன்கருதி எடு த்த முயற்சிகள் கைகூடும், இல்லத்திற்குத் தேவை யான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பிள்ளைகளால் பெரு மைகள் வந்து சேரலாம்.

கும்பம்

எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கி யத்தில் சுவனம் தேவை, குடு ம்பத்தினர் பெருமைப்ப டும் வகையில் சில நிகழ்வுகள் நடை பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

மிதுனம்

நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

கன்னி

தன்னம்பிக்கையோடு செய ற்படுவீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்தி ப்பு இடம்பெறலாம், பொறுமை யால் பெருமை சேரும் நாள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

தனுசு

பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரி யங்களைச் செய்து முடிப் பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

மீனம்

நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், எதிர் பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது முடிவை யாராவது கேட்டால் மட்டும் சொல்.

எரிவாயு சிலிண்டரை பெற சாவகச்சேரியில் நீண்ட வரிசை

(சாவகச்சேரி)

எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்ள சாவகச் சேரியிலும் பொதுமக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அண்மித்துள்ள எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றின் முன்பாக இவ்வாறு மக்கள் காலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்து சிலிண்டரைப் பெற்றுக்கொண்டு சென்றனர்.

குறித்த நிறுவனத்தில் எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கப்படுவதாக அறிந்து பொதுமக்கள் பலர் கூடியமையால் இவ் இடத்தில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. (4-5-30)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை பொதுநூலகத்தினால் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் நடத்தப்படும் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தி வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் தரம் 01 - தரம் 09 வரையான மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது. போட்டிகள் அனைத்தும் 2022.01.15 சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு வேலணை பொது நூலகத்தில் நடத்தப்படும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 2022.01.13 ஆம் திகதிக்கு முன்னர் பெயர், பாடசாலை, தரம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை வேலணை பொது நூலகம், வேலணை பிரதேச சபை, வங்களாவடி சந்தி, வேலணை இல் பதிவு செய்து கொள்ளுமாறு வேலணை பிரதேச சபை தவிசாளர் ந.கருணாகரமூர்த்தி அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கான போட்டிகள் தரம் 01- திருக்குறள் 1 ம் அதிகாரம் (கடவுள் வாழ்த்து), தரம் 02-திருக்குறள் முதல் இரு அதிகாரம் (கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு), தரம் 03- சொல்வதெழுதல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), தரம் 04- கணிதச் செயற்பாடுகள், தரம் 05- புலமை பரிசில் மாதிரி வினாத்தாள், தரம் 06-வாசிப்பு, தரம் 07-அகராதியில் இருந்து சொற்களுக்கான பொருள் அறிதல், தரம் 08- கட்டுரை- வாசிப்பின் முக்கியத்துவம், தரம் 09- கட்டுரை வாசிப்பின் இன்றைய போக்கு என்பனவாகும். (4-5)

தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவு தினம் நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 க்கு மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக, யாழ். முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-33-104)

பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள், அயலவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

புதிய செயற்குழு தெரிவும், யாப்பு மற்றும் சங்கத்தின் எதிர்கால திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெறும் எனவும் தெரிவித்தார். (4-5-33)

வர்த்தக சந்தை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொழிற்றுறை திணைகளத்தால் தைப்பொங்கலை முன்னிட்டு உள்ளூர் பற்றிக், கைத்தறி மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை வழங்கும் முகமாக யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை வர்த்தக சந்தை 2022 ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண தொழிற்றுறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் துசியா கஜமுகன் அறிவித்துள்ளார். (4-5)

மத நல்லிணக்கம் என்ற பெயரில் ஆரியகுளத்தை அபகரிக்க முடியாது

வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் 13 ஆவது திருத்தத்தால் செய்ய வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன. அதை விட்டுவிட்டு ஆளுநர் அரசின் அழுத்தத்தால் பல் வேறு எதிர்ப்பு விடயங்களை வடக்கில் செய்கிறார் என வலி காமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், இலங்கை அரசு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை பறித்து அதை மத்தியின் கீழ் தந்திரமாக எவ்வாறு கையகப்படுத்தலாம் என்று செயற்பட்டு வருகிறது. அதற்கு அவர்கள் பயன்படுத்தி வரும் ஆயுதம்தான் உள்ளூராட்சி சபைகள்.

உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு கூட நாம் மத்தியில் தங்கி நிற்கும் நிலையில், வடக்கு மாகாணத்தில் ஆளுநரை பயன்படுத்தி இப்போது புதிய நாடகங்கள் இங்கு நடைபெறுகின்றன. ஆரியகுளத்தில் மத நல்லிணக்கத்தை இல்லாமல் செய்வது, அரசியல் அமைப்பை மீறுகிறது என்று ஆளுநர் தெரிவித்தார்.

ஆகவே ஆரியகுளம் யாருடைய சொத்து உள்ளிட்ட பல கேள்விகளை ஆளுநர் இப்போது முன்வைத்துள்ளார். இலங்கையில் மத நல்லிணக்க பிரச்சினை காணப்படுகிறது. ஆகவே அதனை பகுத்தாராய வேண்டிய தேவை உள்ளது. மத ரீதியான ஆக்கிரமிப்புக்கள் குருந்தூர் மலையில் இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று நாவற்குழியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஆரியகுளத்தில் மத ரீதியான குழப்பங்களை அரசு ஏற்படுத்துவதை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

வடக்கு மாகாண ஆளுநருக்கு அரசு கொடுக்கும் அழுத்தம் காரணமாகவே இது நடக்கிறது. முன்னரும் கூட குளத்தின் நடுவில் மத மத்திய ஸ்தலம் கட்டுவதற்கு தேரர் ஒருவர் மாநகர சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

வேண்டும் என்றால் பகிரங்க வாக்கெடுப்பை எடுக்கட்டும். இங்கு என்ன செய்வது, இப்படி ஒரு மத நல்லிணக்கம் வேண்டுமா என்று. பொதுமக்களுக்கு தேவை நிம்மதி. அவர்களுக்கு சிங்கள பௌத்த மயமாக்கல் தேவை இல்லை என அவர் தெரிவித்தார். (4-5-33)

இரு நூல்களின் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

புதிய நதியா நகைமாடமும் தாய் சக்தி கலைக்கூடமும் இணைந்து வழங்கும் கவிஞர் வேலணையூர் சுரேஷ் எழுதிய மானிடப் பேரிடர் (கொரோனாக் காலப் பதிவுகள் மற்றும் குறும் புப்பா-100 ஆகிய இரு நூல்களின் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தத், பேராசிரியர் கலாநிதி என.சண் முகலிங்கன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் யாழ்.போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் சி.சிவன் சுதனும், சிறப்பு விருந்தினராக யாழ் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனும் கலந்து கொள்வர். (5-6)

வடக்கு மீனவர்களின் பிரச்சினையை தீர்க்கக்கோரி துண்டுப்பிரசுரங்கள்

(அராலி)

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன இணைந்து, வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி, நேற்று மாதகல் கடற்கரையில் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

சட்டவிரோத மீன்பிடியை தடை செய்யுமாறு கோரியும் இந்திய இழுவைப் படகுகளினால் இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (4-5-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிவாயு தட்டுப்பாட்டால் 15 ஆயிரம் ஹோட்டல்கள் மூடல்

(கொழும்பு)

நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 15 ஆயிரத் துக்கும் அதிகமான சிறிய ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச் சாலைகள் உரிமையாளர்கள் சங்கம் தெரிவிக்கிறது.

ஹோட்டல்களுக்கு சமை யல் எரிவாயு கிடைக்கின்ற போதிலும் அவை அவர்க ளது நாளாந்த தேவைக்கு பற்றாக்குறையாக காணப் படுவதன் காரணத்தினா லேயே விறகு அடுப்பு பயன்படு த்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-5)

இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்கக்கோரி மத்திய அரசிற்கு தமிழக முதல்வர் ஸ்ராலின் கடிதம்

(சென்னை)

இலங்கை சிறையில் தடு த்து வைக்கப்பட்டுள்ள, 56 தமிழக மீனவர்களையும் விடுவிக்க, நடவடிக்கை எடு க்க வேண்டும் என தமிழ்நாடு மாநில முதலமைச்சர் மு.க. ஸ்ராலின் இந்திய மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய் சங்கருக்கு இதுகுறித்து அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் 19ஆம் மற் றும் 20 ஆம் திகதிகளிலிருந்து இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 56 மீன வர்களை விடுவித்து, பாதுகாப் பாக இந்தியாவுக்கு அழைத்து வர தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன், இலங்கை அர சின் தடுப்பில் உள்ள, தமிழக மீனவர்களுக்குச் சொந்த மான, அவர்களின் வாழ்வா தாரத்திற்கு இன்றியமையாத 75 மீன்பிடிப் படகுகளையும் மீட்க வேண்டும் என்றும் இதற்கான உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளை இலங்கை அரசாங்கத்துடன் நடத்துமாறு கேட்டுக் கொள்வதாகவும் முத லமைச்சர் மு.க.ஸ்ராலின் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு ள்ளார். (நி-5)

ஜப்பானில் கடும் பனிப்பொழிவு 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயம்

விடுக்கப்பட்டது பனிப்புயல் எச்சரிக்கை



(டோக்கியோ)

ஜப்பான் தலைநகர் டோக்கி யோவில் கொட்டும் பனிப்பொ ழிவு காரணமாக 500 இற்கும் மேற்பட்டவர்கள் மருத்துவம னைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின் றது.

வீதிகளில் படிந்துள்ள பனிப் படலத்தில் அவர்கள் வழுக்கி விழுந்து காயமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

4 ஆண்டுகளின் பின்னர் டோக்கியோவில் பனிப்புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

பனிப்பொழிவு காரணமாக டோக்கியோ கேட் பாலத்தில் ஒரே நேரத்தில் 100 வாகனங் கள் சிக்கிக்கொண்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேபோன்று பனி காரண மாக டோக்கியோவில் பல விமான சேவைகளும் ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. (நி-5)

புடைவை வர்த்தகர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நல்லூர் சட்டநாதர் ஆல யத்துக்கு முன்பாக நேற்று இந்த வாள்வெட்டுத் தாக்கு தல் இடம்பெற்றதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாய மடைந்த 28 வயதுடைய வர்த்தகர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார்.

பணக் கொடுக்கல்-வாங் கல் தொடர்பில் உள்ள முர ண்பாடு காரணமாக இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றது என ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். (4-5-18-33-104)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு:1976 இந்து நட்சத்திரம்:சுவாதி 3 கி.பா: 82 செவ் 7 சூரி 4இல் உயரம்:5'5" தகைமை/தொழில்:உயர்தரம் தனியார் தொழில் கனடா PR. எழுத்துடன் திருமணம் குழம்பியது தொ.இ: B/6133	பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா:38 செவ் 7 சூரி 9 இல் உயரம்:5'5" தகைமை/தொழில்:. லண்டன் பல்கலைக் கழக பட்டப்படிப்பு எதிர்பார்ப்பு:வெளிநாட்டில் பிறந்தவர்கள் மட்டும் தொ.இ:G/7534
பிறப்பு:1985 இந்து நட்சத்திரம்:அவிட்டம் 4 கி.பா: 22 ½ செவ் 3 சூரி 10 இல் உயரம்:5'9" தகைமை/தொழில்: A/L அரசதொழில் (தபால் திணைக்களம்) எதிர்பார்ப்பு:அரச தொழில் தொ.இ: B/6142	பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்:கேட்டை 3 கி.பா:08 செவ் 9 சூரி 10இல் உயரம்:5'2" தகைமை/தொழில்:உயர்தரம் எதிர்பார்ப்பு:வெளிநாடு, உள்நாடு தொ.இ:G/7573
பிறப்பு:1985 இந்து நட்சத்திரம்:சித்திரை 1 கி.பா:44 சூரி,செவ் 4 இல் உயரம்:5'6" தகைமை/தொழில்: Nursing அரசதொழில் எதிர்பார்ப்பு: A/L தொ.இ: B/6161	பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்:அவிட்டம் 3 கி.பா: 2 செவ் 4சூரி 8இல் உயரம்:5'8" தகைமை/தொழில்:A/L எதிர்பார்ப்பு:வெளிநாடு தொ.இ:G/7600
பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: உத்தரம் 3 கி.பா:38 செவ்10 சூரி 11 இல் உயரம்:5'5" தகைமை/தொழில்:B.Sc/பொறியியலாளர் பிரான்ஸ் PR எதிர்பார்ப்பு: பட்டதாரி உரும்பிராய் புன்னாலைக் கட்டுவன், தீவு வேண்டாம் தொ.இ: B/6177	பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்:ஆயிலியம் கி.பா: செவ் 3 சூரி 2இல் உயரம்:5'4" தகைமை/தொழில்:வைத்தியர் எதிர்பார்ப்பு:மருத்துவர் விரும்பத்தக்கது அல்லது பொறியியலாளர் தொ.இ:G/7603

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

YMCA வாலிப கிறிஸ்தவ சங்கம்- யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் YMCA கல்வியை ஊக்குவிக்கும் முகமாக வருடாந்தம் விருதுகள் வழங்கும் நிகழ்வினை நடாத்தி வருகின்றது. இதற்கமைய கீழ்வரும் விருதுக்கு வடமாகாணத்தில் வசிக்கும் தகைமையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

01. சகலதுறை விற்பனர் (Best All Rounder) விருது

1. கல்வி (க.பொ.த உயர்தரம்/ தொழில்நுட்பக் கல்லூரி/ பல்கலைக்கழகம்)
2. விளையாட்டு (உள்ளரங்க விளையாட்டு, தடகள விளையாட்டு)
3. பாடசாலை மட்டத்திலான சாரணர்
4. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் மட்டத்திலான மன்றங்களின் சபை உறுப்பினர்கள்
5. சமூக சேவைகள்
6. வேறு

வயது எல்லை 16 தொடக்கம் 30 வயது வரை

(இவ்விருதில் வெற்றி பெறும் இரண்டு மாணவர்களுக்கு (ஒரு ஆண், ஒரு பெண் ரூபா 35,000/= வீதம் பணப்பரிசு வழங்கப்படும்)

தகுதியுடையவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை **பொதுச்செயலாளர், 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 24.01.2022க்கு முன்னதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். தெரிவுகள் யாவும் யாழ். YMCAயின் ஆளுநர் சபையினால் நியமிக்கப்படும் நடுவர்களால் தீர்மானிக்கப்படும். கடந்த வருடங்களில் பங்குபற்றி பரிசில் பெற்றவர்கள் நேர்முகத் தேர்வில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

மேலதிக விபரங்களுக்கு: 021 222 2499/ 077 476 6300/ 076 876 6300

மின்னஞ்சல்: jaffnaymca@gmail.com

பொதுச்செயலாளர்,
YMCA யாழ்ப்பாணம்.

(C-3462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ ஆட்சியை நோக்கி அரசாங்கம் நடைபோடுகிறதா?

மத்தும பண்டார கேள்வி

(கொழும்பு)

நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அவற்றுக்குரிய தீர்வை வழங்குவதைவிடுத்து, ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் விமர்சிப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆளுந்தரப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களே அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்துவரும் நிலையில், நியாயமான விமர்சனங்களை முன்வைக்கும் பொது மக்களுக்கு எதிராக மாத்திரம் நடவடிக்கை எடுப்பதன் காரணம் என்ன?

இத்தகைய செயற்பாடுகள் தற்போதைய அரசாங்கம் ஏகாதிபத்தியவாத, இராணுவ ஆட்சியை நோக்கிப் பயணிக்கின்றதா? என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்தியுள்ள அவர், மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றியீட்டுவது

உறுதி என்றும் தெரிவித்தார்.

அத்தோடு ஊழல் மோசடிகளற்றநாட்டைக்கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு தமது கட்சியினால் முன்னெடுக்கப்படவிருக்கும் பயணத்தில் இணைந்துகொள்ளுமாறும் அவர் நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். (நி-5)

'20' ஒழிக்கப்பட்டு '19' ஐ கொண்டு வர வேண்டும்

முன்னாள் ஜனாதிபதி

(கொழும்பு)

20 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு 19 ஆவது திருத்த சட்டம் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "புதிய அரசொன்றை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அரசை விமர்சிப்பதற்கு எனக்கு தகுதியில்லை என வும் நீங்களும் ஜனாதிபதியாக இருந்தவர்தானே எனவும் சிலர் வலைத்தளாங்களில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

எனது தலைமையில் அமைந்த ஆட்சியானது மாறுபட்டதொன்றாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் அவ்வாறானதொரு அரசு இதுவரை அமையவில்லை. ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது.

மனித உரிமைகள் மதிக்கப்பட்டன. தகவல் அறியும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட்டனர். நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது.

அதேவேளை, 20 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு 19 மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும். அப்போது தான் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு கிட்டும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பான ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத் திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

விமான கண்காணிப்பில் சிக்கிய கஞ்சாத்தோட்டம்

6 மெற்றிக் தொன் கஞ்சா

ஹெலி மூலம் எடுத்துச் செல்லப்பட்டது

(அம்பாறை)

விமானம் மூலம் கண்காணிக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட பெருந்தொகை கஞ்சாவிலிருந்து சுமார் 6 மெற்றிக் தொன் கஞ்சா விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

அம்பாறை, குமண பாதுகாப்பு வனாந்திரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த கண்காணிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையின் போது 5,788 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சா தொகையே ஹெலிகொப்டர் மூலம் சஹஸ் ரவெலி விசேட அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படையின் வரலாற்றில் முதற் தடவையாக இவ்வாறு ஹெலி கொப்டர் மூலம் கஞ்சா கொண்டு செல்லப்பட்டுள்ளது. (நி-5)

தங்க கையிருப்பிலும் கை வைத்தது அரசு

(கொழும்பு)

நாட்டில் தங்கத்தின் கையி ருப்பு பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நவம்பர் மாத இறுதியில் தங்கத்தின் கையிருப்பின் பெறுமதி 382.2 மில்லியன் டொலராகவும் டிசெம்பர் மாத இறுதியில் தங்கத்தின் கையிருப்பு பெறுமதி 175.4 மில்லியன் டொலர் வரையில் வீழ்ச்சிய டைந்துள்ளது.

இதற்கமைய 206.8 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம் மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்பட்டுள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	300	250	250	280
உருளைக்கிழங்கு	170	170	190	200
பச்சைமிளகாய்	750	700	900	800
தக்காளி	200	180	220	200
மரவள்ளிக்கிழங்கு	80	70	60	50
கோவா	250	250	280	300
கரட்	300	440	450	500
பூசணி	80	70	70	100
புடோல்	260	200	--	300
வாழைக்காய்	60	70	60	80
சின்னவெங்காயம்	180	200	150-250	400
பெரியவெங்காயம்	140	140	140	140
பாகற்காய்	350	450	350	400
வெண்டிக்காய்	220	200	150	200
கருணைக்கிழங்கு	100	100	120	120
பயற்றங்காய்	200	300	300	300
லீக்ஸ்	320	250	300	280
பீற்றூட்	-	--	--	400
கறிமிளகாய்	400	600	700	800
முருங்கைக்காய்	--	--	--	--
போஞ்சி	250	220	220	300
கத்தரிதம்புள்ள	280	250	--	260
கீரை - 1 பிடி	80	100	100	80
தேசிக்காய்	160	150	150	120
தேங்காய் (ஒன்று)	80	80	40-80	60-80
இராசவள்ளி	200	240	180	200
வெங்காயப்பூ	450	400	--	--
முள்ளங்கி	140	120	180	200
பொன்னாங்காணி	40	70	100	50
வல்லாரை	40	32	50	40
ஈரப்பலா	120	80	80	100

எவையறிந்தாலும் அவையறிதல் வேண்டும். அவையறியாது பேசும் பேச்சு நோயறியாது கொடுக்கும் மருந்து போல் தீமை பயக்கும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

ஜனாதிபதி கோட்டாபயவின் கர்ச்சிப்பும் காரணமும்...

மன்னன் – மந்திரி – அரச குரு – தளபதி – தூதுவர்கள் – ஒற்றர்கள் என்ற கட்டமைப்பு மன்னராட்சிக்குரியது.

மன்னராட்சி முடிவுற்று மக்களாட்சி தோற்றம் பெற்றபோது; மன்னராட்சியின் கட்டமைப்புகள், சில மாற்றங்களுடனும் திருத்தங்களுடனும் மக்களாட்சியில் உள்ளீர்க்கப்பட்டன.

அந்த அடிப்படையில் ஜனாதிபதி, பிரதம மந்திரி, மந்திரி பிரதானிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என்றவாறு ஜனநாயகக் கட்டமைப்பு அமையப் பெற்றது.

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற ஆட்சியில் மன்னராட்சிக்குரிய இயல்பு கணிசமாக உண்டென்பதையும் கூறித்தானாக வேண்டும்.

இஃது சிறு முன்னுரை மட்டுமே. இவை ஒரு புறமிருக்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பௌத்த பீடங்கள பத்ம விபூஷண விருதை வழங்கிக் கௌரவித்ததைத் தொடர்ந்து, இரு பெரும் அறிவிப்பை ஜனாதிபதி கோட்டாபய வெளிப்படுத்தியுள்ளார்.

அதில் ஒன்று கர்ச்சிப்புடன் கூடியது. மற்றையது காரணத்தைக் கூறுவது.

இதில், யார் தலைகீழாக நின்றாலும் எமது ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கர்ச்சித்துள்ளார்.

கர்ச்சிப்புகள் கற்பனைகளாகவும் கனவுகளாகவும் மாறிய கதைகள் உண்டாயினும் பௌத்த பீடங்கள் வழங்கிய விருதைப் பெற்ற பின்னர் ஜனாதிபதி கர்ச்சித்தார் எனில்,

அது பௌத்த பீடங்களின் ஆசி தன் ஆட்சிக்குக் கிடைத்துவிட்டதென்ற அடிப்படையில் கூறப்பட்டதெனலாம்.

மாறாக, தனது ஆட்சியின் தோல்விக்குக் காரணம் பொருத்தமற்ற – தகைமையற்ற அமைச்சர்களின் நியமனம் எனக் குற்றம் சுமத்தியமை ஆகும்.

முதலில்; எமது ஆட்சியை எவராலும் கவிழ்க்க முடியாதென்பது அரசியலில் தவிர்க்க முடியாத கர்ச்சிப்பு என்று அதனைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிடலாம்.

ஆனால் அமைச்சர்கள், மந்திரிகள் மீது குற்றம் சுமத்தும்போது அதற்குள் ஏதோவொரு தாக்குதல் நோக்கம் இருப்பது தெரிகிறது.

பொருத்தமற்ற அமைச்சர்களைத் தெரிவு செய்தமையே அரசாங்கத்தின் தோல்விக்குக் காரணம் என ஜனாதிபதி சுட்டும்போது,

அப்படியானால், அமைச்சர்களைத் தெரிவு செய்தது யார் என்ற கேள்வி எழும்.

இங்குதான் ஜனாதிபதி தன்னைத் தானே குற்றம் சுமத்திக் கொண்டாரா? என்றால் இல்லை. அப்படிப் பொருள் கொள்ள முடியாது என்பதும் தெரிகிறது.

அப்படியானால், அமைச்சர்களின் தெரிவு தொடர்பில் ஜனாதிபதி முன்வைக்கும் குற்றச்சாட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நோக்கியதாக இருக்கும் என அனுமானிப்பதிலும் தவறில்லை.

ஆம், பிரதமர் பதவியில் இருந்து விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மகிந்த ராஜபக்ஷ விடுத்த அறிவிப்புக்குப் பின்னரே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காரணம் கூறும் கதை வெளிவந்திருப்பது ஐய வினாவை எழுப்பவே செய்யும்.

மின்சார சபைக்கு தொடர்ந்து கடனுக்கு எரிபொருளை விநியோகிக்க முடியாது

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

எரிபொருள் இறக்குமதியின்போது பாரிய டொலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலைமையில் மின்சார சபைக்கு தொடர்ந்து கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க முடியாது.

டொலர் பிரச்சினைக்கான தீர்வினை மின்சாரத்துறை அமைச்சு காண வேண்டும். பிறிதொரு அமைச்சின் நிதி நெருக்கடியினை எம்மால் தொடர்ந்து ஏற்க முடியாது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வலுசக்தி துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய எரிபொருள் விநியோக கட்டமைப்பிற்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்யும்போது எதிர்கொண்டுள்ள டொலர் நெருக்கடியினை வலுசக்தி துறை அமைச்சும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் ஒவ்வொரு முறையும் முகாமைத்துவம் செய்கிறது.

3 நாட்களுக்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு 25 மில்லியன் டொலர் செலுத்த வேண்டிய நிலை காணப்படுகிறது. டொலர் திரட்டிக் கொள்வதற்கு பாரிய நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளோம்.

இலங்கை மின்சார சபைக்கு தொடர்ந்து எம்மால் கடன் அடிப்படையில் எரிபொருளை விநியோகிக்க முடியாது. மின்சார சபை தமக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு டொலர் திரட்டிக் கொடுத்தால் தடையில்லாமல் எரிபொருளை வழங்க முடியும் என்றார். (ம)

நாட்டிற்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

நாட்டிற்கு தேவையான கொரோனா தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை இன்றுடன் (ஞாயிற்றுக்கிழமை) நிறைவடையவுள்ளது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேன இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அஸ்ட்ராசெனெகா, மொடர்னா, ஸ்புட்னிக், சைனோஃபார்ம் மற்றும் ஃபைசர் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 48,560,424 ஆக பதிவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதில் 6.8 மில்லியன் தடுப்பூசிகள் நன்கொடையாகப் பெறப்பட்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

கிளிநொச்சி பிரதேசத்தில் கனகராயன்குளம், ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர்கிராமம், விஞ்னகுளம், கருநாட்டுக்கேணிச் சந்தி, கொக்கிளாய் மருத்துவமனை, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத் தொடுவாய் வடக்கு (15 ஆவது மைல் கல்லடி), பரராஜசிங்கம் தோட்டம், பெரிய இத்திமடு, புளியாமனைச் சந்தி ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் புதுகமம், கூடு வெந்தபுலவு, குருக்களூர் மன்னார் வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

வவுனியாவில் ஹெரோயினுடன் இரு பெண்கள் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் 63 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த காரை வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸார் வழிமறித்து அதில் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த காரில் 63.84 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் இருந்தமை கண்டறியப்பட்டது. குறித்த சம்பவத்தில் காரில் பயணித்த தம்பதிகளை (இரு பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள்) பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த நபர்களுடன் அவர்களது 4 மற்றும் 9 மாதக் குழந்தைகளும் காரில் பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி மற்றும் மதகுவைத்தகுளம் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-250,299)

அமரத்துவமடைந்த அந்தணர் பெருமக்களை நினைவுகூரல் இன்று

(யாழ்ப்பாணம்)

2021 ஆம் ஆண்டில் அமரத்துவமடைந்த அந்தண சிவாச்சாரியார்களை நினைவு கூரும் நிகழ்வு இன்று நல்லூர் நல்லை ஆதீன மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் சிவஸ்ரீ. ஐம்பு மகேஸ் வரகுருக்கள், சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்த குருக்கள், சிவஸ்ரீ. ந. உரூத் திரமூர்த்திக் குருக்கள், சிவஸ்ரீ. பி. சந்திரசேகரக் குருக்கள், ஸ்ரீமதி. புவனேஸ்வரி அம்மையார், சிவஸ்ரீ. வை. சபாரத்தினக்குருக்கள், சிவஸ்ரீ. க. கந்தசாமி குருக்கள் ஆகியோர் நினைவுகூரப்படவுள்ளனர். (ம)

இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ "என்னிடம் நம்பிக்கை கொள்பவர் என்னிடம் மட்டும் அல்ல, என்னை அனுப்பியவரிடமே நம்பிக்கை கொள்கிறார்.

❖ "குளித்துவிட்டவர் தம் காலடிகளை மட்டும் கழுவினால் போதும். அவர் தூய்மையாகிவிடுவார். நீங்களும் தூய்மையாய் இருக்கிறீர்கள். ஆனாலும், அனைவரும் தூய்மையாய் இல்லை"

❖ ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

❖ நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வர்"

❖ "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்.

❖ நான் தந்தையுள் இருக்கிறேன் தந்தை என்னுள் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசத்தின் உதவியுடன் வடக்கு-கிழக்கை கட்டியெழுப்ப வேண்டும்

எதிர்க்கட்சி தலைவர் சஜித்

(குருமன்காடு)

யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கு பாதிப்படைந்துள்ளது. அதனை கட்டியெழுப்ப வேண்டும். அரசாங்கத்தால் முடியாவிட்டால் சர்வதேசத்தின் உதவியைப் பெற்றாவது கட்டியெழுப்ப வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடகால யுத்தத்தில் வடக்கு - கிழக்கு அதிகமாகப் பாதிப்படைந்திருந்தது. அதனை நாம் கட்டியெழுப்ப வேண்டும். முடிந்தால் அரசாங்கம் கட்டியெழுப்ப வேண்டும். அல்லது சர்வதேசத்தின் உதவியை நாட வேண்டும்.

ருவண்டா நாட்டில் யுத்தம் நடந்தது. 8 இலட்சம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. யுத்தம் முடிந்த பின் அந்த நாடு கட்டியெழுப்பப்பட்டது. ஆப்கானிஸ்தானிலும் அவ்வாறே நடந்தது. இன்று சர்வதேசத்துடன் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

ஆனால் வடக்கு - கிழக்கு கட்டியெழுப்பப்படவில்லை. வெறும் வாய்ப்பேச்சில் இருக்கிறார்கள். எமது அரசாங்கத்தின் ஆட்சி வரும் போது யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்கு-கிழக்கு பகுதியை கட்டியெழுப்புவோம்.

எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அரை குறையாக இருப்பதாக சிலர் எம்மிடம் கேட்கிறார்கள். கடந்த தேர்தலில் இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இன்னொருவருக்குத்தான் அதிகப் படியான வாக்குகளை வழங்கி ஆட்சிக்குக் கொண்டு வந்திருந்தார்கள்.

அவர்கள் இந்த நாட்டுக்காக, அந்த மக்களுக்காக வீட்டை பூர்த்தி செய்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை. எனவே இவர்கள் இந்த நாட்டை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் எதிர்பார்ப்புடன் வாக்களித்ததார்கள். அதை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இதனை மக்கள் புரிந்து கொண்டு இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார். (4-5-250)

விலை அதிகரிப்பிற்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(நெளுக்குளம்)

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியினரால் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் உழைக்கும் மக்களை பட்டினி போடாதே, கட்டுப்பாட்டு விலையை கொண்டுவா, ஊழல்பணத்தை வெளியே கொண்டுவா, உழைப்போரை வதைக்காதே, தேர்தல் வாக்குறுதி என்னாச்சு போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (4-5-299)

அம்மன் ஆலயத்தில் உள்ள வேம்பிலிருந்து பால்



(தருமபுரம்)

பளைப்பிரதேசத்தில் அரத்தி நகர் எனும் கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்று ஆலயமான அரத்தி அம்மன் ஆலயத்தில் கடந்த சில நாட்களாக ஆலய வளாகத்தினுள் உள்ள வேப்ப மரத்தில் இருந்து பால் வடிவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

பளை பிரதேசத்தில் அமைந்துள்ள அரத்தி அம்மன் ஆலயத்தில் இதுவரை இப்படியான சம்பவம் நிகழ்ந்ததில்லை எனவும் குறித்த சம்பவம் வியப்பாக உள்ளது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் யாழ்.புன்னாலைக்கட்டுவன் பகுதியிலும் மற்றும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் ஆகியவற்றிலும் இவ்வாறான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பல வருடங்கள் பழைமையான வேப்பமரங்கள் சிலவற்றில் இவ்வாறு பால் போன்ற திரவம் வடிகின்றது. இது ஓர் அரிதான நிகழ்வு என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-5-316)

வயற்காணி இடாப்பு மீள் திருத்தல் வேலைகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள் திருத்த வேலைகள் இம் மாதத்திற்குள் முடிக்கப்படவுள்ளமையால் உரிய நடைமுறைகளுடன் குறித்த திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கமக்காரர்களிடம் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள் திருத்த வேலைகள் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

வயற் காணி இடாப்பு மீள் திருத்த வேலையின் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள 13 கமநல சேவைகள் நிலையங்களிலும் வயற்காணி பதிவேடுகளை விவசாயிகள் பார்வையிட முடியும்.

வயற்காணி பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு கமக்காரர்கள் தங்கள் வயற்காணி அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் கமநல சேவை நிலையங்களில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் வயற்காணி பதிவைத் திருத்திக் கொள்ள முடியும்.

எதிர்பார்த்துள்ள தங்கள் காணி தொடர்பில் இதுவரை உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காத கமக்காரர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தங்கள் காணிப் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

வயற் காணி இடாப்பு மீள் திருத்தம் தொடர்பான மேலதிக விபரங்களை தங்கள் பகுதிக்கு பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் அல்லது கமநல சேவைகள் நிலையங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-285)

மருத்துவர் பற்றாக்குறையுடன் பளை மருத்துவமனை

பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(தருமபுரம்)

கிளிநொச்சி பளை மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறை காரணமாக அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த மருத்துவமனை ஒரு மருத்துவரை மட்டுமே கொண்டு இயங்கி வருவதுடன் ஏனைய மருத்துவ வசதிகளும் குறைவாகவே காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

ஏ-9 வீதி அருகே அமைந்துள்ள குறித்த மருத்துவமனைக்கு வீதி விபத்துக்களால் காயமடைந்த நிலையில் கொண்டு வரப்படும் நோயாளிகளுக்கு போதியளவு மருத்துவ வசதி இல்லாமையால் கிளிநொச்சி பொது மருத்துவமனை அல்லது யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படுகின்றனர்.

இதனால் இறப்புகளும் அதிகளவில் இடம்பபெறுகின்றன எனவும் தெரிவித்தனர்.

எனவே மேலதிக மருத்துவரை நியமிக்குமாறும் அவசர தேவைகளுக்கான மருத்துவ வசதிகளைப் பெற்றுத் தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை கோரப்படாத

பயணப் பொதியில் இருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்பு

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தில் உரிமை கோராத பயணப் பொதி ஒன்றில் இருந்து இராணுவத்தினரால் 360 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

நேற்றுக்காலை தலைமன்னாரில் கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதம் தோட்டவெளி புகையிரத நிலையத்தை சென்றடைந்தபோது அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் குறித்த புகையிரதத்தில் ஏறினர்.

இதன்போது குறித்த புகையிரதத்தில் உரிமை கோரப்படாத பயணப் பொதி ஒன்று காணப்பட்டது.

இராணுவத்தினர் அந்த பயணப் பொதியை சோதனை செய்தபோது அப்பயணப் பொதியில் இருந்து "ஐஸ்" போதைப் பொருள் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக குறித்த "ஐஸ்" போதைப் பொருள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-5-285)

13 பேர்...

13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,112 ஆக அதிகரித்துள்ளது. (ம)

முல்லையில்...

ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் தனியார் ஒருவரின் தென்னங்காணி ஒன்றில் உள்ள கிணற்றில் இருந்து இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பூதன்வயல் கிராமத்தில் வசித்துவந்த 36 வயதுடைய யோகராசா றாஜினி என்ற இளம் குடும்பப் பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 04.01.2022ஆம் திகதியில் இருந்து குறித்த பெண்ணைக் காணவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள். திருமணமாகி இரண்டு வயது வந்த பிள்ளைகள் உள்ள நிலையில் கணவரை பிரிந்து இன்னொரு ஆணுடன் குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-281)

மாலை 6 மணி...

சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்மூலம் மின்வெட்டை குறைக்க முடியும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்தார்.

இந்நிலையில், அடுத்த சில நாட்களிலும் அவ்வப்போது மின்சாரம் தடைப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார். (ம)

வவுனியாவிலி...

வவுனியா நகர் இலுப்பைக்குளம் பகுதியிலிருந்து கொழும்பிற்கு தொழில் நிமிர்த்தம் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

வவுனியா நகர் இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் கடந்த மூன்று மாதங்களாக கொழும்பில் தங்கியிருந்து தொழில் புரிந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 6ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு செல்வதாக தனது நண்பர்களிடம் கூறிவிட்டு புறப்பட்டுள்ளார்.

இதேவேளை தனது வீட்டிற்கும் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி தான் வவுனியாவிற்கு வருவதாக கூறியுள்ளார். எனினும் அதன் பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டிற்கும் வரவில்லை. இதனையடுத்து அவரது தாயாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் பாலுசுந்தரம் சுதர்சன் (வயது - 20) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளார். அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 076 770 0438 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தெரியப்படுத்துமாறு அவர்களது குடும்பத்தினரால் கோரப்பட்டுள்ளது. (ம-250,299)

முல்லையில் மர்ம...

யொதுங்கியுள்ளது.

நேற்று அதிகாலை தொழிலுக்காக சென்ற மீனவர்கள் குறித்த கப்பல் கரை ஒதுங்கியுள்ளதைக் கண்டு கடற்படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

120 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்டதாகக் காணப்படும் இந்தக் கப்பல், செம்மலை கிழக்கு நாயாறு கடற்கரையிலிருந்து 25 மீற்றர் தூரத்தில் கடலில் தலைகீழாக புரண்ட நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

இந்தக் கப்பல் யாருடையது? எங்கிருந்து வந்துள்ளது? போன்ற விபரங்கள் இதுவரை வெளிவராத நிலையில், பெருமளவான மக்களும் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ம-250,281)

இந்திய மீனவர்...

முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என வடக்கு மற்றும் தெற்கு மீனவ அமைப்புகள் கூட்டாக தெரிவித்தன.

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்துடன் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்துடன் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொண்டது.

இது தொடர்பில் இரண்டு மீனவ அமைப்புகளும் கூட்டாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளின் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் காரணமாக வடபகுதி மீனவர்களின் கடல் வளமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

2500 இந்திய இழுவைப் படகுகளை தடை செய்து இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தலைநகர் கொழும்பில் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்திருக்கிறோம். அத்துடன் அகில இலங்கை ரீதியாக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எட்டப்படும் என்று தெரிவித்துள்ளது. (ம)

சஜித் இன்று...

யம் மேற்கொள்ளவுள்ளார்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான பயணத்தை முடித்துக் கொண்டுள்ள நிலையில் இன்று காலை யாழில் ஊடகவியலாளர்களுடனும் சந்திப்பை நடத்தவுள்ளார்.

இதன்பின்னர் நயினாதீவு செல்லும் அவர் நாகதீப விகாரை, நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபடுவார்.

பின்னர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்குச் செல்லும் அவர், இராஜ மகேந்திரனின் நினைவாக மேற்படி வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி வைப்பார்.

பிற்பகல் 3.30 மணியளவில் திருநகரில் இடம்பெறவுள்ள அரசியல் கூட்டமொன்றிலும் இரவு 7 மணியளவில் யாழ். வியாபார சமூகத்துடனான சந்திப்பொன்றிலும் பங்குபற்றுவார். (ம)

கொழு...

இடையிலான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்து 65 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்துள்ளார்.

தூதுக்குழுவினருடன்இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன வெளிவிவகார அமைச்சர், பல்வேறு முக்கிய சந்திப்புக்களை மேற்கொள்ள உள்ளார். (ம)

சர்வ...

எடுக்கப்பட்ட போதிலும், எந்தவொரு சந்தேகநபர் மீதும், கைதிகள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அதற்கு எதிர்மறையாகவே உள்ளன.

எனது ஆட்சி காலத்தில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டமையின் காரணமாகவே சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் பரந்தளவில் கிடைக்கப் பெற்றன.

எனது அரசாங்கத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. எனினும் நாட்டில் ஊழல் மோசடிக்காரர்களே அதிகம் காணப்பட்டமையால், எதிர்த்தரப்பிலுள்ள ஊழல் வாதிகள் ஆளுந்தரப்பு ஊழல்வாதிகளுடன் இணைந்து எனக்கெதிராக சதி செய்தனர்.

எனது ஆட்சியில் என்னை கடுமையாக விமர்சித்தவர்கள், இன்று நான் அரசாங்கத்தின் குறைபாடுகளை விமர்சிக்கும் போது ஏன் என்று கேள்வியெழுப்புகின்றனர் என்றார். (ம)

குறைந்த...

படாவிட்டாலோ அல்லது இதர செலவினங்களை குறைக்காவிட்டாலோ பணம் அச்சடித்து நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

இன்று இந்நாட்டு மக்கள் பாரிய பணவீக்கத்தை எதிர்நோக்கி வருவதாகவும், குறைந்த வருமானம் பெறுபவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம)

தன நிதானய
திகதி - 2022.01.08
சீட்டிழுப்பு இலக்கம் - 671
P 23 25 27 71
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2936
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 42 55 65 72
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 4641
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 1 2 9 6 5
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2022/01/08
1661 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 08 32 40 55
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 08/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0989
வெற்றி எழுத்து W
சுப்பர் இலக்க 15
வெற்றி இலக்கங்கள் 30 44 47 76

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1195
வெற்றி இலக்கங்கள் தனுசு 4 6 6 5 5 7
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1444
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 08.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,282,320
வெற்றி இலக்கங்கள் 39 47 52 58
ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3779
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 08.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,255,220
வெற்றி இலக்கங்கள் 05 30 48 71
ஆங்கில எழுத்து D
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1618
சீட்டிழுப்பு திகதி 08.01.2022
நிறம் நீலம்
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் O 05 21 59 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 53,557,538/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,630,350/=
திகதி 08.01.2022
வெற்றி வாரம் 3330
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 11 12 24 33
தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,188,260/=

12 வர்ணம்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 10 09 22 30 71
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 202,399,441/-
சீட்டிழுப்பு வாரம் 794
வர்ணம் சிவப்பு
திகதி 2022.01.08
சனிக்கிழமை
தொலை மேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
திகதி : 2022-01-08
வெற்றி வாரம் : 475 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 12,422,808/-
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 25 17 16
விதி எண் 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,591,600/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,526,644/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு (ஆண்,பெண்) வேலையாட்கள் தேவை.
வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை.
மாத வேதனமாக 17,000/= தொடக்கம் 25,000/= வரை வழங்கப்படும்.
வேலை நேரம் : காலை 7.30 - மாலை 5.30 வரை.

விற்பனையாளர் தேவை

வவுனியா நகர்ப் பகுதியில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு (ஆண்,பெண்) விற்பனையாளர் தேவை.
வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை.
மாத வேதனமாக 17,000/= தொடக்கம் 20,000/= வரை வழங்கப்படும்.(வவுனியாவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)

074 049 0003

(9461)

உடனடி வேலை வாய்ப்பு

- Computer Technician
- விடுதி முகாமையாளர் (ஆண்/ பெண்)
- அறைகள் துப்புரவு செய்பவர் (ஆண்/ பெண்)

தகுதி உடையவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

(9482)

Sai Holiday INN
No. 132, Kachcheri - Nallur Road, Jaffna.

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 165 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[மேட்டுநிலம், நிலப்பரப்பு]
நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 4 இலட்சம்

(9466)

தொடர்பு
077 911 6983, 077 658 5999
077 288 0152, 077 623 4204

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3381)

0768226240 DHL

வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில்
CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு)
COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும்
ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்

IELTS Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
0777-068-777 R1

(C-3382)

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, ஆரியகுளத்தை அண்மித்த பகுதியில் 4 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
பரப்பு - 75 இலட்சம்
(விலை பேசித் தீர்மானிக்கலாம்.)

(C-3472)

077 892 8094
076 995 2499

நீர்க்கசிவை நிறுத்துவதற்கு WATER PROOFING

சிமெந்தினால் கட்டப்பட்ட கடைகள், வீடுகள் போன்றவற்றில் உள்ள வெளிப்புறச் சுவர்கள், மொட்டைமாடி, தண்ணீர்த் தொட்டிகள், மேல்மாடி குளியல் அறைகள், கோவில்கள், தேவாலயங்கள், திருமண மண்டபங்கள், நீச்சல் தடாகங்கள், முகட்டுக் கூரைகள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவு சம்பந்தமான பிரச்சினைகளை உலகத் தரம்வாய்ந்த நீர்க்கசிவு இரசாயனங்களை உபயோகித்து 10 வருட உத்திரவாதத்துடன் சீர்செய்து தருகின்றோம்.

சிமெந்து மேற்பரப்பை உடைக்காமல் (குளியல் அறை மாபிள்கள், நிலப்பரப்பை) மேலதிக செலவுகள் இன்றி நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வை **Mr. Seal** தருகின்றது.

வட பிராந்தியத்தின் ஏக விநியோகஸ்தர்களாகிய எம்மிடம் Mr. Seal இரசாயனங்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

(9480)

Sky Line Holders (Pvt) Ltd.
No. 89, Old Park Road, Jaffna.
077 722 0095, 021 221 4994, 021 225 2999

+580

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 580 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5,91 231 ஆக அதிகரித்துள்ளது. (ம)

வேலை வாய்ப்பு

எமது பண்ணைகள் புதிதாக பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

விண்ணப்பிக்கக் கூடியவர்கள்:
- O/L வரை படித்தவர்கள்.
- அரச வேலையில் ஓய்வுபெற்ற அதிகாரிகள், ஆசிரியர்கள்.
- விவசாய, கால்நடை ஆர்வம்.அனுபவம் மிக அவசியம்.

சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.

குத்தகைக்கு அல்லது விலைக்கு வேண்டும்

நெல் வயல் காணிகள், தென்னங்காணிகள், தோட்டக்காணிகள், பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் செய்ய உகந்த காணிகள்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

(9473)

தொடர்பு
+9477 795 0439 / +94 (71) 703 0547
0041 79 3344733

அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | **கொக்குவில்**

தரம் 06 - O/L வரையான
[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு ஆரம்பம் - 2022
09.01.2022
ஞாயிற்றுக்கிழமை

நேரம்
தரம் 9, 8, 7 - மதியம் 1.00
தரம் 10,11 - காலை 6.20

ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கு மட்டும் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பு: (இதுவரை காலமும் ஆங்கில மொழிமூல வகுப்புகளிற்கு 35 மாணவர்களிற்கு மாத்திரமே அனுமதிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இருந்து 50 மாணவர்கள் வரை உள்வாங்கப்படுகின்றனர்.)

அகரத்தின் வளர்ச்சிப் படிகளில் 9A பதிவுகள்

2013 - 08	2018 - 12
2016 - 10	2019 - 13
2017 - 15	2020 - 35

ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை அலுவலகம் திறந்திருக்கும்.

"அகரம் எம்தேசக் குழந்தைகளின் ஏற்றமிடு எதிர்காலம்"

(9449)

ENGLISH Personal Classes

ஆங்கிலம்
பிரத்தியேக வகுப்புகள்
அனுபவமிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (9475)

077 658 9443 யாழ்ப்பாணம்

Spoken English ஆங்கிலத்தில்

பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். IELTS (Students Visa) IELTS LIFE Skills Ai (U.K) நாட்டின் எப்பகுதியிலிருந்தும் online மூலமாக கற்கலாம். (9472) **072 267 6713**

2021 இற்கான நாடக பாடத்திற்கான வழிகாட்டல்

10.01.2022 திங்கள்
8.30 A.M - 1.00 P.M
11.01.2022 செவ்வாய்
2.30 P.M - 5.30 P.M

MR. K.MANGALESH

இடம் : DMI - JAFFNA
(ஆரியகுளம்)

077 959 0360

(C-3473)

வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிர்மாண ஒப்பந்த நிறுவனத்திற்கு
- கள உத்தியோகத்தர் (field Staff)
- Site Supervisors (NCT civil)

உடன் தேவை.

தொடர்பு
077 711 0329

மீசாலையில் இயங்கும் பார்மசி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

(9474)

தொடர்பு
077 245 4224

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 326

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 09.01.2022 | தொலைபேசி : 021 222 3378

வெடித்ததால் விருது

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் சிறாப்பர் கனகசபையைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மூப்பர்: எங்க இன்னமும் சிறாப்பர் கனகசபையைக் காணவில்லை. ஆலடிக்கு வராவிட்டால்கூட, ஒருக்காச் சொல்லிப் போட்டுத்தான் நிற்பார்.

விதானையார்: எதுக்கும் ஒருக்கா ரெலிபோன் எடுத்துப் பார்ப்பம் என்று கூறியபடி, தனது கையடக்கத் தொலைபேசியை எடுத்து சிறாப்பற்ற தொலைபேசி இலக்கத்தை அழுத்தினார்.

ஹலோ! நான் விதானையார் விசுவலிங்கம் கதைக்கிறன். எங்க ஆலடிப் பக்கம் காணல்ல.

சிறாப்பர்: நான் இப்ப ஹொஸ்பிற்றலில இருக்கிறன்.

விதானையார்: ஏன் என்ன நடந்தது?

சிறாப்பர்: நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில கிளினிக்குக்குப் போனனான். சுமார் 7 மணித்தியாலம் குந்தியிருந்ததில உடம்பெல்லாம் நோ. அதுதான்...

விதானையார்: என்ன சிறாப்பர் சொல்லுறியள். கிளினிக்குக்குப் போறது நல்லது தானே.

சிறாப்பர்: அதிகாலையில போய் கிளினிக் நடக்கிற இடத்தில குந்தியிருந்தால், நாலு மணித்தியாலம் செல்லும் டொக்டர் பாக்கிறதுக்கு. பிறகு றிப்பிற் எண்டு எழுதின கொப்பியைக் குடுத்து மருந்தெடுக்க, மூன்று மணித்தியாலம்.

இந்த வதைபடலத்தில சிக்கினதால உடம்பு ஏலாமல் போயிற்று. அதாலதான் இரவு 1990 இற்கு அடிச்சு அம்புலன்ஸில கொஸ்பிற்றலுக்கு வந்து சேந்தன்.

விதானையார்: சரி மூப்பர் நீங்க ஓய்வெடுங்க. நான் பிறகு வந்து பார்க்கிறன். இவ்வாறு சொன்னபடி தொலைபேசி இணைப்பை விதானையார் துண்டித்தார்.

சிறாப்பருக்கும் விதானையாருக்கும் இடையில் நடந்த தொலைபேசி உரையாடலை ஆலடியில்

6 யோக்கட் வாங்கினால்தான் ஓர் அங்கர் பால்மா பக்கெட்

இருந்த அனைவரும் கேட்டுக்கொண்டிருந்ததால், ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

கங்காணி: நோய்க்கு மருந்தெடுக்கப் போய் நீண்ட நெடுநேரம் காத்திருந்து உடல் உபாதைக்கு ஆளாகுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். ஆகையால ஆலடியில ஒரு தீர்மானத்தை எடுப்பம்.

சாத்திரியார்: கங்காணியார் என்ன தீர்மானம்.

கங்காணி: யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட அனைத்து வைத்தியசாலைகளில நடக்கின்ற கிளினிக்கில மருத்துவர்கள் நோயாளர்களை விரைவாகப் பார்வையிடுவதோடு அவர்களுக்குரிய மருந்துகளை உடனடியாகக் கொடுத்து அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்கின்ற நடவடிக்கைகளை யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு கங்காணியார்கூற, அந்தத் தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தைத் தொடர்ந்து ஆலடியில் சில நிமிடங்கள் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்கப் பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

பண்டிதர்: இனி எங்க பார்த்தாலும் கால்கடுக்க நிற்கிற காலம் தொடங்குது. நாங்கள் என்ன செய்வம். பெருமூச்சு விட்டவாறு பண்டிதர் கூறினார்.

சாத்திரியார்: என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

பண்டிதர்: பொருளியலாளர்களின் கருத்துப்படி இனி இலங்கையில பஞ்சம், பசி, பட்டினி தலைவிரித்தாடப் போகுது.

இப்ப ஹாஸ் சிலிண்டர்களைப் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசை தொடங்கிற்று. எதிர்காலத்தில பாணுக்கும் அரிசிக்கும் நீண்ட கியூ நிற்கத்தான் போகுது.

வாத்தியார்: என்ன பஞ்சம் ஏற்பட்டாலும் தர்மத்தைக் காப்பாற்றுவதில எங்கட வர்த்தகர்கள் உறுதியாக இருக்க வேணும். இல்லையெண்டால் எல்லாம் அம்போதான். இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடியில் நிசப்தம் நிலவியது.

வாத்தியார் இவ்வாறு கூறியதும் அனைவரும் வாத்தியாரின் முகத்தைப் பார்த்தனர்.

தான் கூறியதன் அர்த்தம் என்ன? என்பது புரியவில்லை என்பதையே அவர்களின் பார்வை உணர்த்தியதாக உணர்ந்து கொண்ட வாத்தியார் விளக்கம் கொடுத்தார்.

வாத்தியார்: நாட்டில வறுமையும் பஞ்சமும் ஏற்படப்போவது உண்மைதான்.

ஆனால் இந்த இக்கட்டான சூழ்நிலையை எவரும் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு இலாபம் உழைக்க நினைக்கக் கூடாது.

இப்ப அங்கர் பால்மா தட்டுப்பாடு நிலவுது. இருந்தும் ஒரு சில கடையில அங்கர் பால்மா விற்பனை செய்தாலும் ஆறு, ஏழு யோக்கட் கட்டாயம் வாங்கவேணும் எண்ட நிபந்தனை விதிக்கப்படுகுது. இது எந்தவகையிலும் நியாயமாகாது.

அங்கர் பால்மா வாங்குவதில் வடபகுதி மக்களே முன்னிலையில் உள்ளனர். இந்தநிலையில ஆறு யோக்கட் வாங்கினால்தான் ஒரு அங்கர் பால்மா பைக்கட் தரப்படும் எண்டு நிபந்தனை விதிப்பது அங்கர் நிறுவனத்தின்ர நன்மதிப்பைக் கெடுக்கிறதாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல் இப்படியொரு வியாபார முறைமையை அங்கர் நிறுவனம் காட்டிக் கொடுக்கிற மாதிரியாகவும் இருப்பதால்,

இப்படி தர்மமற்ற வியாபார முறைமையை குறித்த அங்கர் நிறுவனம் கைவிட வேணும் எண்டு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு வாத்தியார் கூறிமுடிக்க, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகழ்ந்த வாயினால் புகழ்ந்து பாடும் - அரசியல் -

“இகழ்ந்த வாயால் எம்மை புகழ்ந்து பாடு என ஔவைப்பாட்டியைப் பார்த்து முருகப் பெருமான் கேட்டது போல ஜனாதிபதியை இகழ்ந்தவர்களே அவருக்கு உயரிய விருதான பத்ம விபூஷண விருதைக் கொடுத்து அழகு பார்த்துள்ளனர்.”

அன்றைய காலங்களில் கிராமப் புறங்களில் கிணறு இறைக்கும் நிகழ்வென்பது மிகவும் குதூகல மான ஒரு விடயமாக நடை பெறும்.

ஆம், மண்ணெண்ணெயில் இயங்கும் ஊசிலி மிசின் வோட்டர்பம் பூட்டி கிணறு இறைப்ப தென்றால் அங்கு பெரும் கூட்டமே நிற்கும்.

அதை கிணறு கலக்கி இறைப்பது என்று அழைப்பர்.

கிணற்றில் போட்ட போ(B)ளைகள் அள்ளும் சேற்றுடன் வருகிறதா என்று அலசி ஆராய்ந்து கொண்டி ருப்பார்கள் சிறுவட்டுக்கள்.

தண்ணீருடன் வெளிவரும் மீன் குஞ்சுகளை ஹொர்லிக்ஸ் போத்தலுக்குள் விட்டு அழகு பார்த்துக் கொண்டிருப்பார்கள் வேறுசில வட்டுப் பயல்கள்.

கிணறு இறைக்கும் போது கிணற்றில் உள்ள சேற்றை கிணற்றில் உள்ள பட்டைக் கிணற்றுக்குள் கொண்டு வந்து அதில் வைத்து அள்ளி வெளியில் எடுப்பது எழுதப்படாத விதி.

பட்டைக்கிணறு என்பது துலா அல்லது கப்பியில் நீர் அள்ளும் இடத்தில் கிணற்றுக்குள் தோண்டப்பட்டிருக்கும் ஒரு சிறிய பள்ளம். சேற்றைக் கலக்கிய தண்ணீரை வெளியேபீய்ச்சிக் கொண்டிருக்கும் ஊசிலி மிசின் பட்டக் கிணற்றில் இருக்கும் சேற்றை நீருடன் சேர்த்து வெளியே இழுத்தெறியும் செயற்பாட்டுடன் கிணறு இறைக்கும் செயற்பாடு முடிந்து விட இறைத்த கிணற்றுக்கு சாம்பிராணிப் புகை போட்டு விட்டு தண்ணீர் நன்கு ஊறிய பின்னர் தான் அதில் நீர் எடுக்கும் வழமை அப்போது இருந்தது.

ஆனால் இப்போது குழாய்க் கிணறுகள் பெரிய கிணற்றை காணாமல் ஆக்கிவிட்டன.

அதுசரி இப்போது ஏன் கிணறு இறைக்கும் பழைய கதை சொல்கிறீர் என உங்கள் மனங்களில் எழும் கோபம் எனக்குப் புரிகிறது. காரணம் இருக்கிறது சொல்கிறேன்,

பட்டைக்கிணறு என்று கூறினேனே. கிணற்றில் கடைசியாக இருக்கும் சேறு, சேற்று நீர் என்பவற்றை எடுக்கும் இடம். இந்த பட்டைக்கிணற்றுச் சேற்று நீர் போலத்தான் தற்போது இலங்கையின் பொருளாதாரமும் இருக்கிறது.

ஆம், கிணற்றின் இறுதி நீர் வெளியேற்றப்படுவது போல இலங்கையின் இறுதி இருப்புக்களும் இழுத்தெறியப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மையானது.

இது இலங்கையை சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளின் நிலைக்குத் தள்ளும் செயற்பாடு என ஆய்வாளர்கள் தொடர்ந்து எதிர்வு கூறிக் கொண்டே இருக்கின்றார்கள்.

நல்லாட்சியின் முடிவு ராஜபக்ஷக்களின் எழுச்சியாய் அமைந்தன.ராஜபக்ஷக்களை இந்த நாட்டின் கதாநாயகர்கள் என பெரும் பான்மைச் சிங்கள மக்கள் கருதினர்.

பயங்கரவாதத்தை அழித்து தம்மை சுதந்திரமாக எங்கும் நடமாடச் செய்தவர்கள் ராஜபக்ஷக்கள் என்ற எண்ணம் பெரும் பான்மை சிங்கள மக்கள் மத்தியில் இருந்ததன் விளைவே அவர்கள் மீண்டும் ஆட்சியைப்பிடிக்க காரணமாக இருந்தது.

அதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சிங்கள மக்களும், பௌத்த தேரர்களும் பூரணமாய் நம்பினர்.

அவ்வாறே பெரும்பான்மை பலத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக ஆட்சியை தன் கையில் எடுத்தார்.

ஆரம்பத்தில் அதிரடி நடவடிக்கைகள் பல நடந்தேறினாலும் அதன் பின்னான செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தின என்பது மறுக்க முடியாத உண்மை.

கொரோனாவின் தாக்கத்தால் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் இரசாயன உர இறக்குமதிக்கான தடை அமைச்சரவையின் ஆதரவுடன் நடைமுறைக்கு வந்தது.

ஆனாலும் இரசாயன உரத்திற்கு பதிலீடாக இயற்கை உரம் போதுமானதாகவும் அது தொடர்பாக விழிப்புணர்வுகளும் விவசாயிகளுக்கு கொடுக்காததன் விளைவு விவசாயிகள் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை அரசிற்கு எதிராக மேற்கொண்டனர்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு எகிறிக் கொண்டே செல்கின்றது. அத்துடன் பால்மாவுக்கான தட்டுப்பாடு மக்கள் மத்தியில் பாரிய விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

எரிவாயுவின் திடீர் விலையேற்றத்துடன் கூடிய புதிய வடிவிலான எரிவாயு சிலிண்டர்கள் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டதுடன் அவை வகை தொகையின்றி வெடித்துச் சிதறத் தொடங்கின.

இதனால் இல்லத்தரசிகள் எரிவாயு சிலிண்டரைப் பயன் படுத்த திகில் அடைந்ததுடன் அவற்றைத் தவிர்த்து விறகு- மண்ணெண்ணெய் அடுப்பிற்கு மாறினர்.

அதன் பின்னர் எரிபொருளின் விலை சடுதியாக எகிறியது.

இவை தமிழ் மக்களுக்கு பழக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் சிங்கள மக்களுக்கு புதிதான விடயமாக காணப்பட்டதுடன் அரசின் மீது அவர்கள் கோபம் கொள்ளத் தொடங்கினர்.

இதன் விளைவு இலங்கையின் பெரும்பான்மை ஆட்சியைத் தீர்மானிக்கும் பௌத்த தேரர்களின் அதிருப்தியை ராஜபக்ஷ அரசு சம்பாதித்துக் கொண்டது.

ராஜபக்ஷக்களின் வெற்றிக்காக அரும்பாடுபட்ட பௌத்த தேரர்களே அவர்களை வீதியில் இறங்கி எதிர்த்ததுடன் இந்த அரசு கவிழும் காலம் நெருங்கி விட்டது என சூளுரைத்தனர்.

இது இவ்வாறு இருக்கையில் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவராக ஞான சார தேரரை ஜனாதிபதி நியமித்ததுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக ஆனந்த தேரர் நியமிக்கப்பட்டார்.

அரசை விமர்சிக்கும் ஆட் சியை மாற்றவல்ல தேரர்களுக்கு தகுந்த பதவியை வழங்குவதனூடே ஆட்சியைத் தக்க வைக்கும் கைங்கரியம் மிகவும் சிறப்பான முறையில் நடந்து முடிந்து சில காலங்களிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜப க்ஷவுக்கு பௌத்த பீடங்களால் உயரிய விருதான ஸ்ரீலங்கா தீஸ்வர பத்ம விபூஷண விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு இகழ்ந்த வாயால் எம்மை புகழ்ந்து பாடு என ஔவைப்பாட்டியைப் பார்த்து முருகப் பெருமான் கேட்டது போல ஜனாதிபதியை இகழ்ந்தவர்களே அவருக்கு உயரிய விருதான பத்மபூஷண விருதைக் கொடுத்து அழகு பார்த்துள்ளனர்.

கௌரவப் பட்டம் பெற்றதன் பின்னர் புதிய தென்புடன் நிகழ் வொன்றில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ “யார் தலைகீழாக நின்றாலும் எனது ஆட்சியை எதுவும் செய்ய முடியாது” எனப் பேசி இருக்கிறார்.

இதனூடே பட்டங்களும் பதவிகளுமே ஆட்சி அதிகாரங்களைத் தீர்மானிக்கின்றன என்ற அனுமானத்திற்கு வர முடியும்.

நாடு எக்கேடு கெட்டுப் போனால் என்ன என நினைப்பது நாட்டையும் நாட்டு மக்களையும் படுகுழிக்குள் தள்ளும் விடயம் என்பதை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவுக்கூர்மை

அரசர் கிருஷ்ண சந்திரருக்கு அடுத்தடுத்து மகள்கள் பிறந்தனர். தனக்குப் பின் ஆட்சி செய்ய ஒரு மகன் இலலையே என்று கவலைப் பட்டார். பல கோவில்களுக்குச் சென்று அவரும், அரசியும் வழிபட்டனர்.

அடுத்த ஆண்டே அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. தனக்கு மகன் பிறந்ததை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

அரண்மனையே விழாக் கோலம் பூண்டது. இளவரசனைப்பார்ப்பதற்காக மக்கள் எல்லோரும் அரண்மனைக்கு வந்தனர். அவர்கள் ஒவ்வொருவராக இளவரசனைப் பார்த்து விட்டுச் சென்றனர்.

அங்கு வந்த கோபால் இளவரசனைப் பார்த்தான்.

"அரசே! இளவரசரின் முகம் மிகுந்த பொலிவுடன் விளங்குகிறது. அறிவிலும், வீரத்திலும் ஈடு இணையற்றவராக விளங்கப் போகிறார். உங்களை விடப் பேரும், புகழும் பெறப் போகிறார்" என்றான்.

அங்கிருந்த அமைச்சர்கள் இதைக் கேட்டனர். "கோபாலைச் சிக்கலில் மாட்ட வழி கிடைத்தது" என்று நினைத்தனர்.

"அரசே! உங்களை மகிழ்ச்சிப்படுத்தப் பொய் சொன்னால் நீங்கள் அதை ஏற்றுக் கொள் வீர்களா? அவர்களை நீங்கள் நம்புவீர்களா? அது ஏமாற்றுவது போல ஆகாதா? அப்படிப்பட்டவர்களை தண்டிக்க வேண்டாமா?" என்று கேட்டனர்.

அவர்கள் எதற்காக அப்படிப் பேசுகின்றனர் என்பது அரசருக்குப் புரிந்தது.

"கோபால் அப்படிப் பட்டவன் அல்ல... யாரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பொய் சொல்லமாட்டான். இதை அவனை வைத்தே நிரூபிக்க வேண்டும்" என்று நினைத்தார்.

"கோபால்! நீ உண்மையிலேயே என் மகனின் எதிர்காலத்தைச் சொன்னாயா? என்னை மகிழ்ச்சிப்படுத்த இப்படிப் பேசினாயா?"

"அரசே! யாரையும் மகிழ்ச்சிப்படுத்த நான் பொய் சொல்ல மாட்டேன். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பர்.

இளவரசரின் திருமுகம் அவர் பேரும், புகழும் பெறப் போகிறார் என்பதைக் காட்டுகிறது. நான் சொல்வது முழுக்க, முழுக்க உண்மைதான்" என்றான் கோபால்.

இதைக் கேட்ட அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். ஆனால், அமைச்சர்கள் நிறைவு அடையவில்லை.

அரசரைத் தனியே சந்தித்த அவர்கள், "அரசே! எதிர் காலத்தைச் சொல்லும் ஞானி என்றா கோபாலை நினைக்கிறீர்? அவன் சொன்னது முழுப் பொய். நாங்கள் சொல்வது போல அவனுக்கு ஒரு சோதனை வையுங்கள். அவன் குட்டு வெளிப்பட்டு விடும்" என்றனர்.

(தொடரும்)

மகாபாரதம்

எனவே தானே தனக்கு நண்பன். தானே தனக்குப் பகைவன். தனது செயலுக்குத் தானே சாட்சி. செய்யும் செயல் ஒரு வேளை கெடுமாயினும், பெரு முயற்சியால் இன்னொரு சமயம் கூடி வரும்.

புண்ணிய பலத்தினால்தான் தேவலோக வாழ்வு கிடைக்கிறது. நற்செயல் காரணமாகப் பெறும் புண்ணியம் இல்லாதவனைத் தெய்வம் கண்டு கொள்வதில்லை.

தவத்தில் சிறந்த முனிவர்கள் சாபம் கொடுப்பது தெய்வத்தின் அருளால் அல்ல. அவர் முயன்ற தவத்தின் வலிமையால். ஆசையும், அறிவின்மையும் உள்ள மனிதனுக்குத் திரண்ட செல்வம் கிடைத்தும் காக்கும் முயற்சி இன்மையால் அது அவனை விட்டு விலகி விடுகிறது.

தெய்வம் அவனைக் காக்க வருவதில்லை. சிறு நெருப்புப் பொறி காற்றினால் தூண்டப்பட்டுப் பெரிதாக ஆவது போலத் தெய்வம் முயற்சியுடையவனை சேர, செல்வம் மிகுதியாகப் பெருகும்.

எண்ணெய் வற்றுவதால் தீப ஒளி மங்கிப் போவது போல, முயற்சி குறைவதால் தெய்வம் ஒய்வடைகிறது. மிக்க செல்வத்தையும், வேண்டிய வசதிகளை இவர்களால் அவற்றை அனுபவிக்க முடிவதில்லை.

மாறாக விடாமுயற்சியுள்ளவன் அவற்றை நன்கு அனுபவிக்கிறான்" என்று வசிஷ்டருக்கு பிரமதேவர் உரைத்தார்" என தருமருக்கு பீஷ்மர் கூறினார்.

இந்திரனுக்கும் கிளிக்கும் நடந்த உரையாடல்

பீஷ்மர் இந்திரனுக்கும், கிளிக்கும் நடந்த உரையாடல் ஒன்றை கதையாக தருமருக்கு உரைத்தார்.

"தருமா! காசி தேசத்தில் ஒரு வேடன் விஷம் தோய்ந்த அம்பையும், வில்லையும் எடுத்துக் கொண்டு மான் வேட்டைக்குக் காடு நோக்கிச் சென்றான். மான் கூட்டம் நிறைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்த வேடன் உற்சாகத்துடன் அம்பைச் செலுத்தினான்.

அது குறி தவறி ஒரு பெரிய ஆலமரத்தில் சென்று பாய்ந்தது. விஷம் தோய்ந்த அம்பானதால் அந்த மரம் பட்டுப் போனது.

மரம் அப்படியான போதும் அந்த மரத்தின் பொந்துகளில் வசித்து வந்த ஒரு கிளி அந்த இடத்தை விட்டு அகலவில்லை.

இரை எடுக்கவில்லை. வெளியே போகவில்லை. தான் வசித்து வந்த மரத்திற்கு இப்படியானதே என வருந்தியது.

கிளியின் அன்பைக் கண்டு இந்திரன் வியப்புற்றான். பறவை இனமாய் இருந்தும் மரத்திடம் இப்படி ஒரு அன்பா? என எண்ணி, கிளி இருந்த மரம் நோக்கி வந்தான். அவன் கிளியிடம்" இந்த மரத்தைவிட்டு ஏன் அகலாமல் இருக்கிறாய்?" என்றான். (தொடரும்)

Digitized by Muthulakshmi Research Academy
mrlakshmi.org | mavandhar.org

சூடான் மக்களைப் போல அரசிற்கு எதிராய் புரட்சி செய்ய நாட்டு மக்களை அழைக்கின்றனரே?

சிவம் வதிரி

M வாழ்க்கை என்பது எப்பேர்ப்பட்டது வியாசரே?

வாழ்வு என்பது இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான். ஆனால் துன்பமே வாழ்க்கையை மூழ்கடிப்பதாய் இருந்தால் அந்த வாழ்க்கைக்குப் பேர் நரகம்.
அவ்வாறே இன்பம் மட்டும் நிறைந்தது தான் வாழ்க்கை எனின், அதில் ஒரு நிலைக்கு மேல் பிடிப்பு அற்றுப் போய் விடும்.
படையப்பா திரைப்படத்தில் மகளைப் பார்த்து ரஜனி கூறுவார், காதலிக்கும் போது பெற்றவர்களை மறந்து போய்விடுகிறீர்கள். கல்யாணத்துக்கப்புறம் உங்களையே மறந்துவிடுகிறீர்கள் கடைசி வரைக்கும் காதலை மறந்திடாதீர்கள் என. இது அனைத்திற்கும் பொருந்தும்.

தேனா யாழ்ப்பாணம்

M இந்த உலகின் மிகப்பெரிய நகைச்சுவை ஒன்றை உங்களால் கூறிவிட முடியுமா வியாசர் அவர்களே?

தனது மனைவி சமைத்த உணவுதான் இந்த உலகில் மிகவும் சுவையான உணவு என மனைவியின் காதில் விழும்படி நண்பர்களிடம் கணவன் கூறுவது.

திரு மந்துவில்

M நாடு எப்பாடுபட்டால் நமக்கென்ன என இருந்துவிட்டால் என்ன வியாசரே?

இப்ப மட்டும் என்னைத்தைக் கிழிச்சிட்டம்.
பயங்கர நித்திரையில் இருந்தவன் எழுந்து எதை எதையே உளறுவது போல முடிவுகள் எடுக்கப்படுவதால் நாடு இந்த நிலையில் வந்து நிற்கிறது.
மருத்துவமனை ஒன்றில் ஒரு நோயாளிக்கு இதய மாற்று சிகிச்சை நடைபெறுகின்றது.
மிகவும் சிரமப்பட்டு பல மருத்துவர்கள் ஒன்றிணைந்து அந்த சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தனர்.
ஆனால் நோயாளி இறந்து விட்டார்.
இந்த நிலை தான் இப்போது நாட்டிற்கும்.
இனிப் பேசிப் பயனில்லைத் தம்பி.

மதுவன் மீசாலை

M ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் பிரிந்து நிற்பதைப் பற்றி கூறுங்கள் வியாசரே?

நமக்கு வந்தால் இரத்தம், மற்றவர்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னி என்ற வடிவேலின் நகைச்சுவை வெறும் நகைச்சுவை அல்ல. மிகச்சிறந்த வாழ்வின் தத்துவத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றது.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
021 567 1532
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

இதில் தமயன்-தம்பி, தாய்-தந்தை, மாமன்-மச்சான் என்ற பேதம் இல்லை.
மற்றவருக்கு ஒரு பிரச்சினை என்றால் அதற்கு ஆயிரம் வியக்கியானம், அறிவுரை கூறுவார்கள்.
அதே தமக்கு வரும் போது இடிந்து போய் இருப்பார்கள். மற்றவர்களைப் பேச முன்னர் கொஞ்சம் மற்றப் பக்கத்தையும் திரும்பிப் பார்க்க வேண்டும்.
இல்லையேல் குற்றவாளி போல் நான்கு பேருக்கு முன் தலை குனிந்து நிற்க வேண்டி வரும்.

பாலசுந்தரம் அம்பன்

M இலங்கை-இந்திய அரசுகள் கூட்டாகப் பேசி முடிவெடுத்தால் இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தீருமல்லவா?

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினையை இரு நாடுகளும் தீர்க்க நினைத்திருந்தால் எப்போதோ தீர்த்திருக்கலாம்.
ஆனால் அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நினைக்கவில்லை என்பது தான் உண்மையானது.
ஏனென்றால் எல்லைப்பிரச்சினையால் முட்டி மோதுவது இலங்கை-இந்தியத் தமிழர்களே.
அதனால் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.
இதே அம்பாந்தோட்டை கடலில் வந்து இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கட்டும் பார்ப்போம்.
நடக்குமா? எனை. எல்லாம் தமிழனாய் பிறந்ததன் விளைவுதான்.

இலங்கை-இந்திய அரசுகள் கூட்டாகப் பேசி முடிவெடுத்தால் இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தீருமல்லவா?

தமிழ் யாழ்ப்பாணம்

M சிங்கள மக்களின் மனநிலை இப்போது என்னவாக இருக்கும் சொல்லுங்கள்?

காஸ் வெடிக்கும் என்று இப்பதான் தெரிஞ்சுது, அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் இப்படி விலை உயரும் என்று இப்பதான் தெரிஞ்சுது.
பாணுக்கும் கோதுமை மாவுக்கும் வரிசையில் நிற்க வேண்டும் என்பது இப்பதான் தெரிஞ்சுது.
வேலை இல்லாமல் போக கையில் காசு இல்லாமல் போகும் என்று இப்பதான் தெரிஞ்சுது.
கடைகள் எல்லாம் மாதக் கணக்கில பூட்டிக் கிடக்க பிள்ளைகள் பட்டினி கிடக்கிற கஷ்டம் இப்பதான் புரியுது.
எல்லாவற்றிற்கும் மேலே நாம் எல்லோரும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக ஓட்டுப் போட்டதின்ர விளைவு இப்பதான் புரியுது.
கடவுளே எப்படா தேர்தல் வரும் என்ற ஏக்கம் இப்போதே வரத் தொடங்கிட்டு.

எவனோ ஒருவன்

M வயதாகிக் கொண்டே போகிறது ஏதும் நல்ல விடயம் நடக்க மாட்டேங்குதே வியாசரே?

முயற்சி செய்யாமல் எப்படி நடக்கும். என்ன விடயம் என்றாலும் முயற்சி என்பது மிகவும் முக்கியமானது.
முயற்சி செய்யாமல் சாப்பிடுறது, ஊர் சுத்துறது, தூங்கிறது, றிப்பிட்டு. சாப்பிடுறது, ஊர் சுத்துறது, தூங்கிறது, றிப்பிட்டு.
இண்டைக்கும் சாப்பிடுவீங்க, ஊர் சுத்துவீங்க, றிப்பிட்டு என்று இருந்தால் நல்லது எப்படி நடக்கும் சொல்லுங்கள்.
சந்தையில் விக்காமல் இருக்கிற முத்தின கத்தரிக்காயை குப்பையில் போடாமல் வத்தல் போடலாமல்லவே.

சுதன் குப்பிழான்

M சூடான் மக்களைப் போல அரசிற்கு எதிராய் புரட்சி செய்ய நாட்டு மக்களை அழைக்கின்றனரே?

பேரினவாதிகள் சிற்றினத் தமிழர்களின் உரிமைகளை பறித்து அவர்களை அடிமைத்தனம் செய்ததன் விளைவு இந்த நாட்டில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடு ஏற்படக் காரணமாயிற்று.
அதையும் பயங்கரவாதம் என்ற போர்வையில் முள்ளிவாய்க்காலில் வைத்து கொன்று புதைத்து விட்டனர்.
அதன் பின்னராவது சிறுபான்மை இனங்கள் இந்த நாட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லையே.
உடல், உள ரீதியாக இன்றுவரை சிறுபான்மை இனம் காயப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால் சூடானை விட மிக மோசமான நாடாக இலங்கை மாறும் போலத் தெரிகிறது. இதில் சூடான் போன்ற புரிட்சி வேறு?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லதை மனமே நாடு

மக்களை மறந்த வேந்தர்
மனிதமே மறந்த மாந்தர்
மந்திரம் மறந்த மறையோன்
எந்திரமாகிய இதயம்
அன்னையை மறந்த மைந்தன்
ஆசானை மறந்த சீடன்
நன்மையை மறந்த உறவு
நன்றியை மறந்த நட்பு
மழையினை மறந்த வானம்
இனிமையை மறந்த கானம்
தனிமையை மறந்த துறவி-என்றும்
எளிமையை மறந்த ஞானி
அறிவுரை மறந்த அமைச்சு
அறத்தினை மறந்த ஆட்சி
ரசிகனை மறந்த கலைஞன்
ராகம் மறந்த தாளம்
நேர்மையை மறந்த தலைமை-தன்
நிலைமையை மறந்த அடிமை
அழகினை மறந்திட்ட கலைகள்
ஆன்மிகம் மறந்த சிலைகள்
அன்பினை மறந்த உள்ளம்
ஆக்கம் தான் மறந்த வெள்ளம்
வந்தனை மறந்த பக்தி-உயர்
சிந்தனையை மறந்த புத்தி
வேகம் மறந்த வேங்கை-நல்
விவேகம் மறந்திட்ட வீரம்
ஒற்றுமை மறந்திட்ட உலகம் ஆன்மிக
பற்றினை மறந்த சமூகம்-தன்
வேரையே மறந்து விட்ட விருட்சம்-பிறந்த
ஊரையும் மறந்த உயர்வு
அகரமதுதான் மறந்த சிகரம்
அத்தனைக்குமுன்டு துயரம்-அதனால்
நாளும் பொழுதும் சாகும் வரையில்
நல்லதையே நீ தேர்ந்து
நெஞ்சமே என்றும் நாடு

வரணியழகன், மூரசுமோட்டை.

மாறாதோ நெஞ்சம்

புத்தாண்டே வருக
புதிதாய் நன்மைகள் தருக
மனித மனத்தின் வேண்டுதலிது
ஆனால் எம் மனம் மாறாமல்
நன்மைகள் நிகழ்வது எங்ஙனம்
அடுத்தவர் வாழ்வதை பொறுக்கா
மனம் எம்முடையதாச்சே
அயலான் குடும்ப நிம்மதியை
கெடுப்பதும் நாங்கள் தானே
பெண்மையின் கற்பினைக் களங்கப்படுத்த
இழி கதைகள் புனைவதும் எம் செயலே
போதையில் சீரழிந்து சீரழிப்பதும்
கெடுவார் எம் திறனே
இயற்கையின் இயல்பு இருப்பை
சிதைத்து அழிப்பதும் மாந்தர் தானே
உறவும் தெரியாது முறையும் மறந்து
சுயநலப் பேய்களாய்
சுய இச்சை வெறியராய்
ஈனச் செயல் பல புரியும் எமக்கு
தை பிறந்தாலென்ன?
புத்தாண்டு மலர்ந்தாலென்ன?
அழிவுகள் தான் தொடருதே
வாழ்க்கை சீரழிகின்றதே
வாழ்க வளமுடன் என்ற வாழ்த்து
மெய்ப்பட வேண்டுமெனில்
மனங்கள் மாற வேண்டும்
ஆம் எம் மனங்கள் புதிதாக வேண்டும்
தயாரா இதற்கு நாம்?

சி.இ.அன்புதுரை
சம்மட்டியோலை
மானிப்பாய்.

தாயை வணங்கிப்பார் தரணி உன் புகழ் பாடும்

மாதங்கள் பத்து
மகிழ்வோடு
உனை சுமந்து
பூமியில் ஈன்று
பூவாக காத்தவளை
புறம் தள்ளலாமா
பசி தாகம் மறந்து
பரிவுடன் அணைத்து
தட்டினில் சாதமிட்டு
வட்ட நிலா காட்டி
வாய் நிறைய ஊட்டியவளை
பட்டினியில் போடலாமா
உயர்வுக்காய்
ஊன்று கோலாய்
உருக்குலைத்து
ஓடாய் தேய்ந்தவளை
உதறித்தள்ளலாமா
நல்வழி காட்டி
நல்வாழ்வு நீ வாழ
எனக்கென்ன குறை என
எண்ணியவளை
ஏமாற்றலாமா
நீ உயர உயர பறந்தாலும்
உன் புகழ் ஓங்காது
தாயை வணங்கிப் பார்
தரணி உன் புகழ்பாடும்.

எஸ்.கலாமணி- மண்டைதீவு.

மௌனத்தின் தேடல்- 544

அவலநிலை

கண்ணருகில் தென்படும்
உணவைக் கையிலெடுத்து
உண்ணுமெண்ணம் மிகுந்தாலும்
உண்ணமுடியாத குழந்தைப் பருவம்
பொறுப்பற்றவர்களிடம் ஆராயாது
பொறுப்பை ஒப்படைத்ததால்
பின் தள்ளப்பட்ட அவலமும்
தன் பொழுது போக்கில் கவனமும்

க.நாகராசா,
நுணாவில்.

பகிர்வு

அன்னத்தைக் கண்டு மகிழ்பவன்
பசியின் வலியை சுமப்பவன்
அன்னத்தைக் கண்டு சினப்பவன்
நிம்மதி இழந்து அலைகிறவன்
ஏழ்மையின் தட்டில்- ஒரு வேளை
ஆகாரமும் அவர்களுக்கு ஆதாரமே!
மனிதர் யோசிக்காமல் வீசும்
ஆகாரம் சில பட்டினிக்கு
விருந்தாகவும் இருக்கும்.

நிரூசினி ஆனந்தராஜன்.

புலன்ககள் இயங்கலையா

பசியில் அழுகிறதா இலலைத்-தாய்ப்
பாசப் பார்வை கிடைக்கலையா
புசி என்று ஊட்டிவிடப் புலன்கள்
இயங்கலையா தாயின் பொறுப்பு
அறுந்த போக்கா உண்ணத்தெரியா
வயதில் ஊட்டிவிடா நிந்தைகள்
உதவும் கரங்களில்லையா பெத்த
மனம் பித்தென்றால் இறைவா....

கார்வண்ணன்
காவலூர்.

சிவப்பதிகாரம்

அரசாங்கத்தின்
பொருளாதார அபிவிருத்தி
தடம் மாறியதால்
விலையேற்றங்களும்
நம் இன மக்களின்
பசித்தாண்டுதலால் ஏற்படும்
தற்கொலை முயற்சிகளும்
வறுமை நிலைகளும்
சோற்றுக்காக சிறார்களுடன்
நடுத்தெருவினிலே...?

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்.

முன்வினைதான்...

பசிபோக்க முடியவில்லை
பாசமும் தான் கிட்டவில்லை
தாய் உனர்வும் எட்டவில்லை
தளிர் முகத்தை நோக்கவில்லை
முகம் அடிகும் தெரியுதில்லை
முக்காலும் உடைந்த நிலை
மனுநீதி எட்டவில்லை இல்லை
முன்வினைதான் குப்பை நிலை

சாமிபுத்திரன்- சரவணை.

அலட்சியம்

முகம் காட்டும் கண்ணாடி
உள்ளத்தை காட்ட தவறியது ஏன்?
உன் பிள்ளை பசித்திருக்க
பாவி நீ விம்பத்துக்குள்
மூழ்குகிறாய்
கண்களில் இருந்து கண்ணீர் சிந்தி
கண்ணம்மா அழுவது ஏனோ
உண்பதற்கு உணவு இருந்தும்
அன்னை ஊட்டிவிட இல்லை
என்பதனாலோ

கும்பவாழியான்
உடுப்பிட்டி.

மௌனத்தின் தேடல்- 545



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

கருணையற்ற கடமை

முகம் பார்க்கும் கண்ணாடியில்
அகம் தெரியாது
வெளி அழகு தெரியும்
அதிகம் பசியுடன் குழந்தை
அழுவதன் மூலம்
குழந்தைக்கு உணவை ஊட்டாத
தாயின் அகம் கருணை இல்லை
என்பதை பிரதிபலிக்கும்
நிதர்சன காட்சி!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

ஓர் இனத்தை முழுதாக அழிப்பதற்காக வருடக்கணக்கில் துடிக்கும் கைகளால் வதைபட்டவனின் அருகாமை, எப்போதும் எனக்குள் இனம் புரியா பதற்றத்தை உதறிவிடும். அவனுக்காக என்றாவது ஒருநாள் பகிரங்கமாக அழுதுவிடுவேனோ என்ற அச்சம் எப்போதும் எனக்குள் இருந்தது.

வலி சொல்லும் தொடர்... 15

அந்த நேரங்களில் அவனுக்கு யாரிடமும் பேச வார்த்தைகள் இருக்கவில்லை. வறண்ட உதடுகள் திறந்திருக்கும். முகமெல்லாம் தடித்திருக்கும். ஒரு வெப்பக்கிடங்காக வெடித்துப் பறக்கும் அவன் நினைவுகள், உடல் முழுதும் அங்கலாய்க்கும்.

அகுனாவின் நிலை தொடர்பாக முகாம் உத்தியோகத்தர்கள் எழுதிய அறிக்கைகளை வைத்தியரிடமும், குடிவரவு அமைச்சு அதிகாரிகளிடமும் கொடுத்தேன்.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி அகுனா காலை நேரத் தொலைக்காட்சியைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நேரங்களில் அவனோடு யாராவது சதுரங்கம் விளையாடுவதற்கு உத்தியோகத்தர்கள் ஒழுங்கு செய்யப்பட்டனர்.

ஆனால், பிரார்த்தனைக்குப் பிறகான அழுகை அவனுக்கு அவசியம் தேவைப்பட்டது. 'அல்பா' கம்பவுண்டுக்கு வெளியில் சென்று, உதைபந்தாட்டத் திடலில் அமர்ந்து, காலைச் சூரியனை அழுவதற்குத் துணைக்கு அழைத்தான்.

முகாமிலிருந்த கணினியும் இணையமும் பல கட்டுப்பாடுகள் நிறைந்தவை. கடிதங்களைத் தட்டச்சு செய்வதற்கும், சில குறிப்பிட்ட வீடியோக்களைப் பார்ப்பதற்கும் தான் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த வடிகட்டிய வசதிகளாவது கிடைத்தது பெரும்பேறு என்று அநேகமானவர்கள் மணிக் கணக்கில் ஏதாவது ஒரு கணினியில் இரவு பகலாகக் கிடப்பார்கள்.

அகுனாவுக்கு தனது மின்னஞ்சல், முகநூல் கடவுச் சொற்களை நினைவில் வைத்திருக்குமளவுக்கு ஞாபகங்கள் மனதில் தேங்கவில்லை. களைத்த கண்கள் எந்நேரமும் அவனைத் தூக்கத்துக்குத் துரத்தின.

'கன்டெய்னர்' கொலைகள் அவன் மனதில் அகற்ற முடியாத அச்சவடுக்களை ஏற்படுத்தியிருந்தன. எண்ணுக்கணக்கில்லாமல் அவனுடலில் ஏற்பட்ட காயங்களும், நினைவுகலங்குமளவுக்கு இருட்டில் வாங்கிய அடிகளும் இன்னமும் கண்களை மூடினால் அடிமனதிலிருந்து சினந்து எழுந்தன.

முகாம் மருத்துவர்கள் தொடர்ச்சியாகக் கொடுக்க ஆரம்பித்த தூக்க மாத்திரைகள் அவனது தூக்கத்துக்கு அவ்வப்போது வசதியாக இருந்தாலும், பகல் முழுவதும் உடலைச் சோர்வாகவே வைத்திருந்தன.

தூக்கம் வராத இரவுகளிலும், அவன் தூங்க விரும்பாத இரவுகளிலும் தன் தமையனோடு பேசுவதற்காக 'அல்பா கம்பவுண்டிலுள்ள அகதிகளுக்கான பொதுத்தொலைபேசியில் வந்து குந்துவான்.

தனது டயறிக் குறிப்பிலிருந்து தமையனின் தொலைபேசிக்கு ஒவ்வொரு எண்ணாகப் பார்த்துப் பார்த்து அழுத்துவான். எப்போதும் அவனுக்கு அழைப்பு கிடைப்பதேயில்லை.

நான் இரவுப் பணியிலிருக்கும் போது ஒருநாள், இந்தோனேசிய தொலைபேசி எண்ணுக்கு அழைப்பெடுத்து தருமாறு உதவி கேட்டான். "அங்கிருந்து படகில் வந்துவிட்டு, இந்தோனேசியாவுக்கு அழைத்துப் பேசாதே. இங்குள்ள தொலைபேசிகள் அனைத்தும் ஒற்று கேட்கப்படுபவை" என்று ஆலோசனை கூறினேன். கைகளை இறுக்கிப் பிடித்து நன்றி கூறினான்.

அகுனாவுடன் சதுரங்கம் விளையாடுவேன். அவன் நுட்பமாக விளையாடுவதைப்போல சிந்திப்பான். ஆனாலும் அவனுக்கு ஒரு கட்டத்துக்கு மேல் விளையாட்டில் கவனம் செலுத்த முடியாமல், தன்னோடு போராடுவான்.

"என்னால் முடியாது ஆபீஸர்."

ஓர் இனத்தை முழுதாக அழிப்பதற்காக வருடக்கணக்கில் துடிக்கும் கைகளால் வதைபட்டவனின் அருகாமை, எப்போதும் எனக்குள் இனம் புரியா பதற்றத்தை உதறிவிடும். அவனுக்காக என்றாவது ஒருநாள் பகிரங்கமாக அழுதுவிடுவேனோ என்ற அச்சம் எப்போதும் எனக்குள் இருந்தது.

அன்று மதியம், உதைபந்தாட்டத் திடலைச் சுற்றி நடந்துகொண்டிருந்த அகுனோ திடீரென்று 'சார்ளி' கம்பவுண்டை நோக்கி வேகமாக ஓடினான்.

குடிவரவு அமைச்சின் அலுவலகத்துக்குள் மயங்கி விழுந்த குயிலனின் மனைவியை மருத்துவ மனைக்குக் கொண்டுபோக, தலையில் சிவப்பு, நீல வெளிச்சத்தை சுழலவிட்டபடி, முகாமின் அவசர காலப் படலையினால் உள்ளே அம்புலன்ஸ் வந்திருந்தது. அதிகாரிகள் குயிலனின் மனைவியைப் பக்குவமாக வண்டியில் ஏற்றினார்கள். குயிலனோடு ஓர் அதிகாரியும் அம்புலன்ஸில் ஏறிக்கொண்டான்.

முகாம் அகதிகள் ஏகப்பட்டவர்கள் திரண்டு வந்து புதினம் பார்த்தபடி நின்றார்கள். சிறுவர்கள் அவுஸ்திரேலிய அம்புலன்ஸை ஆச்சரியத்தோடு பார்த்துச் சிரித்தார்கள். மாறி மாறிச் சுழலும் வண்ண விளக்குகள் அவர்களுக்கு விநோதமாகத் தெரிந்தன.

அப்போது முகாம் அதிர அகுனோ குழறினான்.

'கர்த்தர் உங்களை இரட்சிப்பார். உங்களுடனேயே இருப்பார். இரக்கமும் உருக்கமும் நிறைந்த யேசுவின் கிருபையால் நீங்கள் மீண்டு வருவீர்கள் சகோதரி."

குடிவரவு அமைச்சின் சந்திப்பு அறைக்கு வெளியிலிருந்து கம்பி வேலியைப் பிடித்தபடி, இன்னும் இன்னும் அகுனா சத்தமாகக் குழறினான்.

விடியும்வரை காத்திருந்த வெளிச்சம், இருளின் கதிர்களை பத்திரமாகக் கவ்விக்கொண்டு மறைந்தது. ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டேயிருந்த கம்பி வேலிகளுக்கு மத்தியில் மீண்டும் பகல் வந்து குந்திக்கொண்டது.

குயிலனின் குழந்தைக்கு எட்டுச் செலவு செய்வதற்காக தமிழ் அகதிகள் அதிகாலையிலேயே எழுந்து சமைத்தார்கள்.

முகாம் சமையலறையைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை, குடிவரவு அமைச்சு, அன்றைக்கு மாத்திரம் வழங்கியிருந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் புறா

துணிவின் எல்லை

இரண்டாம் பாகம் 04

அதற்குப்பின் தான் பல நாட்கள் ஸ்மரணையற்றிருந்ததையும் அந்தப் பல நாட்களில் தன்னைத் தாங்கிய அகூதாவின் பெரும் கப்பல் அலை கடலில் பாய் விரித்து ஓடிக் கொண்டிருந்ததையும் அமீர் சொல்லக் கேட்டிருந்தான் இளையபல்லவன். "இளைய பல்லவரே! அகூதா தான் உங்களைக் காத்த தெய்வம். நான் ஓட்டி வந்த வண்டிக்கு ஒரு வேளை ஆபத்து நேர்ந்து தப்ப முடியாவிட்டால் நம்மை வேறு வழியில் தப்புவிக்கவும் ஏற்பாடு செய்திருந்தார் என் குருநாதர்.

இதற்காக, கோதாவரி சங்கமத்திலிருந்து பல அடிகள் தள்ளி ஒரு தனிப்படகையும் தன் மாலுமிகள் சிலரையும் நிறுத்தித் தானும் நின்று போரின் நிலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். நீங்கள் போரில் மூர்ச்சையாகி விழுந்ததும் முரட்டுப் புரவி மீது படுத்ததும் அது கரை நோக்கி வந்ததும் எதையும் கவனிக்கத் தவறாத அவர் விழிகள் கவனித்தன. ஆகவே எங்கள் வண்டி மடக்கப்பட்டு காஞ்சனாதேவியும் அநபாயரும் தப்பியதும் எங்களைத் தன் படகுக்கு வரும்படி சைகை செய்தார்.

நாங்கள் ஓடினோம். அதற்குள் உங்களைத் தாங்கிய புரவியும் நீர்க்கரை வந்து திடீரெனத் திரும்பியது. நீங்கள் புரவியிலிருந்து உருண்டு விழுந்தீர்கள். அகூதா உங்களை இரு கைகளால் தாங்கிக் கொண்டார். எங்களைத் துரத்திய வீரர்களைச் சீன மாலுமிகள் வெட்டிப் போட்டனர்.

வெகு துரிதமாகப் படகில் உங்களையும் எங்களையும் ஏற்றிக் கொண்டு அகூதா தன் மரக்கலத்துக்கு வந்து சேர்ந்தார். மரக்கலம் நங்கூரமெடுத்துப் பாய் விரித்தது. பிறகு பல நாட்கள் நீங்கள் காய்ச்சல் வசப்பட்டீர்கள். ஏதேதோ பிதற்றினீர்கள்" என்று அமீர் ஒரு வருடத்துக்குமுன் அகூதாவின் கப்பலில் விளக்கிச் சொன்னது அன்றும் நினைப்பில் எழுந்தது இளைய பல்லவனுக்கு.

'என்னென்ன பிதற்றினோம்!' என்று எண்ணிப் பார்த்த அவன் முகத்தில் அப்பொழுதும் மந்தகாசம் விரிந்தது. பிதற்றியதை அமீர் ஜாடை மாடையாகத்தான் சொன்னானென்றாலும் மீதியைப் புரிந்து கொள்வதில் எந்தவிதக் கஷ்டமும் ஏற்படவில்லை அந்த வாலிபனுக்கு.

"ஏதோ சாளரத்துக்குள் குதித்ததைச் சொன்னீர்கள். ஆடை... ஆடை... என்றீர்கள். பிறகு கோதாவரியில் நீராடு நீராடு என்றீர்கள். ஆடை உலர்கிறது என்றீர்கள்" என இப்படிப் பிதற்றலை விபரித்தான் அமீர். ஆனால் அமீர் முழுவதையும் சொல்லவில்லையென்பதைப் புரிந்துகொண்ட இளையபல்லவன், காரணத்தை உணர்ந்து பெரு மகிழ்ச்சி கொண்டான்.

வெளிநாட்டுப் பிரமுகர் வீதியின் மாளிகைச் சாளரத்தில் ஏறிக் குதித்த போது தன்னெதிரே ஆடை புனைய வந்த பூங்கோதையும் கோதாவரியில் நீரில் திளைந்துவிட்டு மறைவில் ஆடை உலர்த்திய மோகன வல்லியும், கோதாவரிக் கரைக் குடிசையில் தன்னருகே நின்று நிரந்தரமாகத் தன்னை அடிமையாக்கிக் கொண்ட அந்தக் கட்டழகிக் கள்ளியும் ஒருத்தியேயென்றாலும் அவள் பல உருவங்களில் தன் மனத்தே எழுந்திருக்க வேண்டுமென்றும் சுரவேகத்தில் அவற்றைத்தான் விளக்கி வர்ணித்திருக்க வேண்டுமென்றும் விஷமியான அமீர் விடயத்தை முழுதும் சொல்லாமல் மறைக்கிறானென்பதையும் எண்ணிய அவன் இதயத்தில் மகிழ்ச்சி நிரம்பி நின்றது.

இந்தச் சம்பவங்களும் அதையடுத்துத் தான் அகூதாவின் கப்பலில் காய்ச்சலாக இருந்து பிழைத்தபின் அகூதா தனக்குக் கப்பலோட்டவும் கப்பல் போர் புரியவும் அளித்த பயிற்சியும் நிதானத்தின் அவசியத்தை அவன் திரும்பத் திரும்ப வலியுறுத்தித் தன்னைப் பதனிட்ட திறமையையும் அந்தச் சமயத்தில் எண்ணிய இளைய பல்லவன், இத்தனை பயிற்சியுடைய தான் அக்ஷயமுனைத் தளத்தை எண்ணி அச்சப்பட அவசியமில்லையென்று நினைத்தான்.

சென்ற ஒரு வருட காலத்தில் சொர்ண பூமி வட்டாரங்களிலும் சீனக் கடல் வட்டாரங்களிலும் அகூதா செய்த பெரும் போர்களில் பங்கெடுத்துக் கொண்டு யாருக்கும் கிடைத்தற்கரிய பயிற்சியைப் பெற்றிருந்த இளையபல்லவன், எத்தனை எத்தனையோ அமானுஷ்யமான காரியங்களை அகூதா செய்திருப்பதை எண்ணிப் பார்த்தான்.

அகூதா அத்தகைய பெரும் சாதனைகளைச் சாதிக்க முடியுமானால் தான் மட்டும் ஏன் சாதிக்க முடியாது என்று நினைத்தும் பார்த்தான். செய்ய முடியும் என்ற உறுதி அவனுக்குப் பரிபூரணமாக இருந்ததற்கு அவன் முகத்தில் காணப்பட்ட நிதானமே சான்றாக நின்றது.

தன் கப்பலின் கொம்புகள் ஊதப்பட்டதும் அக்ஷயமுனைக் கடற்பகுதியில் திரண்டிருந்த மாலுமிக் கூட்டங்களும் அவர்கள் குடும்பங்களும் ஓடியதும், கோட்டைக் கத்வு பலமாகச் சாத்தப்பட்டதும், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்பட்டதையும் பார்த்த இளையபல்லவன், அகூதாவின் கொம்புகளுக்கு இருந்த பலத்தை எண்ணி மகிழ்ச்சியடைந்தது மட்டுமல்ல, பெருமிதமும் அடைந்தான்.

அந்தப் பெருமிதம் அவன் முகத்தில் தாண்டவமாடியதையும் அதன் விளைவாக, சற்றே விரிந்த வதனத்தின் கன்னத்திலிருந்த வெட்டுத் தழும்பும் நுதல் உச்சியிலிருந்த குதிரைக் குளம்புகளின் வட்டத் தழும்பும் சற்றே குறுகி அவன் முகத்துக்குப் பெரும் கம்பீரத்தை அளித்ததையும் கண்ட அமீர், "இளையபல்லவரே! அந்த மக்கள் ஓடியதால், நமது அபாயம் நீங்கிவிடவில்லை" என்று சுட்டிக் காட்டினான் ஏளனத்துடன். "அது தெரியும் எனக்கு" என்றான் இளையபல்லவன்.

"அவர்கள் ஓடுவது நமது மரக்கலத்தைக் கண்டு அல்ல" என்று மீண்டும் குறிப்பிட்டான் அமீர். "பின் எதைக் கண்டு?"

"கொம்புகளைக் கண்டு.

அவற்றின் பெரும் அலறலைக் கேட்டு.

"அதுவும் தெரியும் எனக்கு.

"அகூதாவின் கப்பலிலிருந்து தான் இத்தகைய கொம்புகள் ஊதப்படுவது வழக்கம்."

ஆம்.

"இது அகூதாவின் கப்பலென்று அஞ்சி மாலுமிகள் ஓடுகிறார்கள். அவர் பெயரைக் கேட்டாலே இந்தக் கடல் பிராந்தியத்தில் சிம்ம சொப்பனம்.

"சென்ற ஒரு வருட காலத்தில் அதை நானும் பார்த்திருக்கிறேன்.

"இது அகூதாவின் கப்பல் இல்லை என்று தெரிந்ததும் மாலுமிகள் படகுகளில் வந்து மரக்கலத்தை வளைத்துக் கொள்வார்கள்...அல்லது...

"அல்லது?"

"நாம் இறங்கிச் சென்றால் நம்மை வெட்டிப் போடுவார்கள்.

"அப்படியா?"

ஆம்.

"அதைச் சோதிப்போம்" என்று மிகுந்த நிதானத்துடன் சொன்னான் இளையபல்லவன்.

அந்தச் சோதனை பெரும் அபாயமானது என்பதை உணர்ந்த அமீரும் கண்டியத்தேவனும் திடுக்கிட்டார்கள். அதைவிடத் திடுக்கிடும் படியான செய்தியொன்றையும் அடுத்துச் சொன்னான் இளையபல்லவன். "சோதிப்போம் என்பதால் சோதனையில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை" என்று சற்று அழுத்தியும் சொற்களை உதிர்த்தான்.

"நீங்கள் சொல்வது புரியவில்லை" என்றான் கண்டியத்தேவன்.

"இந்தச் சோதனை என் உயிர் சோதனை. இதுதான் என் திட்டம். கவனமாய்க் கேளுங்கள்" என்று திட்டத்தை விளக்கிய இளையபல்லவன் அந்தப் பயங்கரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளிலும் துரிதமாக இறங்கினான்.

அன்றுடன் இளையபல்லவன் ஆயுள் முடிந்துவிட்டதென்றே நினைத்தார்கள் அமீரும், கண்டியத்தேவனும். அது மட்டுமல்ல, அவன் ஆயுள் முடிந்த சில நாழிகைகளில் தங்கள் ஆயுளும் முடியும் என்பதையும் திண்ணமாக நம்பினார்கள்.

அதனால் அவர்கள் முகத்தில் ஏற்பட்ட கிலியையோ தன் திட்டத்தின் பலா பலன்களையோ லட்சியம் செய்யாத இளையபல்லவன், "உம்! நங்கூரம் பாய்ச்சுங்கள்.

நான் கரைக்குச் செல்லப் படகு ஒன்று இறக்குங்கள்" என்று இரைந்து கூவினான். அந்த உத்தரவைக் கேட்ட அமீரும் கண்டியத் தேவனும் பேயறைந்தது போல அசைவற்று நின்றார்கள். துணிவுக்கும் எல்லையுண்டு என்று நினைத்த அவர்கள் துணிவின் எல்லையையும் மீறி அபாய அலுவலில் இறங்கிய இளையபல்லவனின் கதியை எண்ணி எண்ணிப் பெரும் கலவரத்துக்கும் உள்ளானார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்புகள் விற்கப்படும் திரைவிமர்சனம்

சத்யராஜ் பிரபலமான அறுவைச் சிகிச்சை நிபுணர். இவர் திருமணமான தனது மகளுக்கு ஏற்பட்ட வன்கொடுமையைத் தட்டிக்கேட்கக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்கிறார். அப்படி என்ன குற்றம் நடந்தது? அதைச் செய்தவர்கள் யார்? என்பதை திரில்லராக சொல்லியிருக்கிறார் இயக்குநர் தீரன்.

சத்யராஜ் இளமை தோற்றத்துடன் குற்றவாளிகளைக் கடத்தப்பட்ட நிலையில் அறிமுகமாகிறார். மகளின் நிலைக்காக மனம் கலங்குவதும், கோபத்தில் முகம் சிவப்பதும், கவலைப்படாமல் வில்லனின் தவிப்பை ரசிப்பதும் என்று அட்டகாசம் செய்திருக்கிறார். படத்தை நகர்த்தும் முக்கிய கதாபாத்திரத்தில் முழுவதும் பயணிக்கும் ஹரீஸ் உத்தமன், மதுசூதனன் இருவரும் பதைக்க வைக்கும் மனிதர்களாக வந்து, பரிதவிப்பது விறுவிறுப்பு.

மகளாக ஸ்மிருதி வெங்கட் அமைதியான நடிப்பில் நம்மைக் கவர்கிறார். அவரது கணவராக வரும் யுவன் மயில்சாமிக்கு மனதில் நிற்கும் பாத்திரம். சார்லி சில காட்சிகளே வந்தாலும் நிறைவு. ரேணுகா, ஸ்ரீரஞ்சனி, ஜார்ஜ் ஆகியோர் தங்கள் பங்கைச் சரியாகச் செய்திருக்கிறார்கள்.

ஒரு சின்ன விடயத்தைக் கையிலெடுத்துப் பரபரப்பாகக் கதை சொல்லியிருக்கிறார் இயக்குநர் தீரன். சீக்கிரம் 'அது' கிடைத்து விடவேண்டுமே என்கிற பரிதாபம் நமக்கும் வந்து விடுகிறது. கிளைமாக்ஸ் காட்சி ரசிக்க வைக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு எப்படியெல்லாம் தண்டனை தரலாம் என்று இயக்குநர் தீரன் சமுதாய நோக்கோடு இப்படத்தை கொடுத்து இருக்கிறார்.

சமீபத்திய இளம்பெண்கள் தங்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்களுக்கு தாங்களே துணிச்சலுடன் களம் இறங்க ஆரம்பித்திருக்கும் அளவுக்கு பாலியல் குற்றம் அதிகரித்திருக்கும் இந்த நேரத்தில் படம் வந்திருப்பது மிகவும் பொருத்தம்.

திரைக்கதையில் மட்டும் இன் னும் சுவாரஸ்யம் சேர்த்திருந்தால் படத்தில் ஒரு வேகம் கிடைத்திருக்கும்.

ஒளிப்பதிவாளர் கருடவேகா ஆஞ்சியின் கடும் உழைப்பு தெரிகிறது. இசையமைப்பாளர் பிரசாத் எஸ்.என் திரில்லர் படங்களுக்குத் தேவையான பின்னணி இசையைக் கொடுத்திருக்கிறார்.

மொத்தத்தில் 'தீர்ப்புகள் விற்கப்படும்' காலத்தின் தேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலத்தால் அழியாத னங்கள்

திரைப்படம்	:	வருஷம் 16
இயற்றியவர்	:	வாலி
இசை	:	இளையராஜா
பாடியவர்	:	பி.சுசீலா



பொங்கல பொங்கல வைக்க
மஞ்சல மஞ்சல எடு
தங்கச்சி தங்கச்சி தங்கச்சி தங்கச்சி
புஞ்சையும் நஞ்சையும்
இந்த பூமியும் சாமியும் இனி
நம் கட்சி நம் கட்சி நம் கட்சி

பூ பூக்கும் மாசம் தை மாசம்
ஊரெங்கும் வீசும் பூ வாசம்
சின்ன கிளிகள் பறந்து ஆட
சிந்து கவிகள் குயில்கள் பாட
புது ராகம் புது தாளம்
ஒன்று சேரும் நேரம் இந்நேரம்
பூ பூக்கும் மாசம் தை மாசம்
ஊரெங்கும் வீசும் பூ வாசம்
ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

பொங்கல பொங்கல வைக்க
மஞ்சல மஞ்சல எடு
தங்கச்சி தங்கச்சி தங்கச்சி தங்கச்சி
புஞ்சையும் நஞ்சையும்
இந்த பூமியும் சாமியும் இனி
நம் கட்சி நம் கட்சி நம் கட்சி

வாய்க்காலையும் வயல் காட்டையும்
படைத்தால் எனக்கென கிராம தேவதை
தெம்மாங்கையும் தெருக்கத்தையும்
நினைத்தால் இனித்திடும் வாழும் நாள் வரை
குழந்தைகள் கூட குமரியும் ஆட
மந்த மாருதம் வீசுது மலையமாருதம் பாடுது
ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

பூ பூக்கும் மாசம் தை மாசம்
ஊரெங்கும் வீசும் பூ வாசம்

நான் தூங்கியே நாளானது
அது ஏன் எனக்கொரு மோகம் வந்தது
பால் மேனியும் நூலானது
அது ஏன் அதுக்கொரு தாகம் வந்தது
மனதினில் கோடி நினைவுகள் ஓடி
மன்னன் யாரென தேடுதோ
உன்னை பார்த்ததும் கூடுதோ
ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

பூ பூக்கும் மாசம் தை மாசம்
ஊரெங்கும் வீசும் பூ வாசம்

பொங்கல பொங்கல வைக்க
மஞ்சல மஞ்சல எடு
தங்கச்சி தங்கச்சி தங்கச்சி தங்கச்சி
புஞ்சையும் நஞ்சையும்
இந்த பூமியும் சாமியும் இனி
நம் கட்சி நம் கட்சி நம் கட்சி

பனிக்கட்டிகளால் உருவாக்கப்பட்ட நகரம்

பனியால் உருவாக்கப்பட்ட பிரமாண்ட கோபுரங்கள், மாளிகைகள் என ஒரு பனி நகரமே இந்தத் திருவிழாவில் நம் கண் முன்னே இருக்கும். முற்றிலும் பனியாலேயே உருவாக்கப்பட்ட உணவகங்கள் கூட இருக்கும்.

உலகத்தில் பல நாடுகள் ஒமிக்ரோன் பரவல் காரணமாக பல தடுமாற்றங்களைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் சீனாவோ வழக்கமாக நடக்கும் கொண்டாட்டங்களில் மும்முரமாகவே உள்ளது.

சீனாவில் வருடா வருடம் நடத்தப்படும் பனித்திருவிழா இந்த வருடமும் தொடங்கப்பட்டுகளை கட்டத் தொடங்கியுள்ளது. இந்த பனித்திருவிழா சீன நாட்டின் வடகிழக்கு மாகாணமான ஹைலோன் ஜியாங் கில் (Heilongjiang) உள்ள ஹார்பின் (Harbin) என்னும் ஊரில் நடைபெறும். இந்த வருடம் நடைபெறுவது 38 ஆவது பனித் திருவிழா.

டிசெம்பர் 25 ஆம் திகதியே தொடங்கிவிட்ட இந்த திருவிழா பெப்ரவரி மாத இறுதி வரை இரண்டு மாதங்கள் நடைபெறுமாம். இந்தப் பனித் திருவிழா வின் சிறப்பே முற்றிலும் பனியால் கட்டப்பட்ட கட்டடங்களும் பனியை வைத்து செதுக்கப்பட்ட சிற்பங்களும் தான்.

கட்டடங்கள் என்றால் சாதாரணமாக சின்னச் சின்ன கட்டடங்கள் கிடையாது. பனியால் உருவாக்கப்பட்ட பிரமாண்ட கோபுரங்கள், மாளிகைகள் என ஒரு பனி நகரமே இந்த திருவிழாவில் நம் கண் முன்னே இருக்கும். முற்றிலும் பனியாலேயே உருவாக்கப்பட்ட உணவகங்கள் கூட இருக்கும்.

பனியினால் மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்ட சிலைகளுக்குப் பஞ்சம் இருக்காது. இந்த திருவிழா முதலில் சீனாவில் தோன்றியது 1963 ஆம் ஆண்டில் தான். பிறகு சில அரசியல் காரணங்களால் இந்த திருவிழா தடைப்பட்டிருந்தாலும் 1985 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடந்து வருகிறது. இங்கு பனியில் செய்யப்பட்ட விலங்குகள், பூக்கள், அருவிகள், மேற்கத்திய சர்க்கள் என பல்வேறு பதுமைகள் இருக்கும். ஒவ்வொரு வருடமும் அந்த வருடத்துக்கான "தீம்"மிற்கு ஏற்ப இது மாறும். 2009 ஆம் ஆண்டு நடந்த பனித் திருவிழாவிற்கு டிஸ்னி ஸ்பொன்ஸர் செய்ததால் அந்த வருடம் பனியினால். ஆன டிஸ்னி கேரக்டர்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த வருடத்திற்கான தீமாக "குளிர்கால ஒலிம்பிக்" எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒலிம்பிக் கிராமங்களின் மாதிரிகளை பனியினால் அப்படியே உருவாக்கியுள்ளார்கள். இவை பீஜிங்கில் நடக்கவுள்ள குளிர்கால ஒலிம்பிக்கை ஊக்குவிப்பதற்காகவே அமைக்கப்பட்டவை.

இப்படி பனியினால் ஆன ஒரு நகரத்தையே உருவாக்க 400 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் டிசெம்பர் மாதம் முழுவதும் உழைக்கிறார்கள். கட்டடங்களைக் கட்டுவதற்கான பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பனிக்கட்டிகள் ஹார்பின் நகரத்திற்கு அருகில் ஓடும் சோன்குவா (Songhua) நதியிலிருந்து எடுத்து வரப்படுகின்றன. இந்த பனிக்கட்டிகளை வைத்து கட்டடங்களை உருவாக்கும் கலைஞர்களுள் ஒருவரான வாங்க் க்யூஷெங்க் கூறுகையில்,

"நிஜ பனிக்கட்டிகள் வைத்து மட்டுமே கட்டடங்களை உருவாக்க முடியும். செயற்கை பனிக்கட்டிகள் இவ்வளவு உறுதியாகவும் காற்றின் வேகத்தைத் தாங்கும் வகையில் இருக்காது" என்கிறார். டிசெம்பர் மாதம் முழுவதும் உறையும் பனியில் வேலை செய்யும் இந்த கலைஞர்கள் உறுதியான கோட் மற்றும் கையுறைகளுடன் காலையிலிருந்து இரவு வரை உழைக்கிறார்கள், சில சமயங்களில் இரவு தாண்டி நடுராத்திரியில் கூட உழைக்க வேண்டிய சூழல் வருமாம். இவர்களின் இந்த கடின உழைப்பினால் தான் இந்த அழகிய பனி நகரம் பிரமாண்டத் தோற்றம் எடுக்கிறது. இந்த பனி திருவிழாவில் வெவ்வேறு கலை நிகழ்ச்சிகளும் வான வேடிக்கைகள் கூட நடைபெறும்.

பனி சம்பந்தமான சாகச விளையாட்டுக்கள், பனி சறுக்குதல், பனியில் வண்டி ஓட்டுதல், பனியில் விளையாடும் ஹொக்கி, கால்பந்து எனப் பல பொழுதுபோக்கு அம்சங்களும் நிறைந்து உள்ளன. பொதுவாக டிசெம்பர் மாத இறுதியில் இந்த திருவிழா தொடங்கினாலும் ஜனவரி முதல் வாரத்தில் தான் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் கூடிய முறையான தொடக்க விழா நடக்கும்.

பெப்ரவரி மாத இறுதிவரை இருக்கும் இந்த விழாவிற்கு முறையான முடிவு விழா என்றெல்லாம் இருக்காது. மார்ச் மாத தொடக்கத்தில் பனியெல்லாம் தானாகவே உருகிவிடுமாம். "ஃப்ரோசன்" (Frozen) படத்தில் வந்த பனி மாளிகைகளை நேரில் கண்டு ரசிக்க இந்த ஹார்பின் பனித்திருவிழாவிற்குத்தான் செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எம்பயர் ஸ்டேட் கட்டடம்

எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் மற்றொரு தோற்றம்

1929 இல் ஜெனரல் மோட்டார்ஸ் எனும் கார் கம்பனியின் உரிமையாளர் ஜான் ஜெ.ரஸ்காப், கோல்மேன் மற்றும் பிசாரே, லூயிஸ் காஃப்மன், எல்லிஸ் எரிக் ஆகியோர் இணைந்து ஒரு வணிக வளாகத்தை கட்ட வேண்டும் என்றும் அது உலகிலேயே உயரமான கட்டடம் என்ற பெயரைப் பெற வேண்டும் என்றும் முடிவு செய்து ஹோட்டல் இருந்த இடத்தை வாங்கினர்.

வில்லியம் லாம்ப் என்பவர் தலைமையில் ஒரு குழு வணிக வளாக கட்டட வரைபடத்தைத் தயாரித்தது. 1930 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நிலத்தைச் சமப்படுத்தி அஸ்திவாரம் அமைக்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் மார்ச் 7 ஆம் திகதி தொடங்கியது. 1931 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் பணிகள் நிறைவுற்றன.

1931 ஆம் வருடம் மே மாதம் முதல் திகதி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவர் வோஷிங்டனில் இருந்தபடி 'பொத்தானை' அமுக்க எம்பயர் ஸ்டேட் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அன்றைக்கு உலகில் உயர்ந்த கட்டடம் என்ற பெருமை அதற்குக் கிடைத்தது. 100 மாடிகளுக்கு மேல் கட்டப்பட்ட முதல் கட்டடம் என்ற பெயரும் இக்கட்டடத்துக்கே உண்டு.

1000 இற்கும் மேற்பட்ட வணிக நிறுவனங்கள் 21 ஆயிரம் பணியாட்கள் இன்று பணிபுரியும் இக்கட்டடத்தில் மொத்த 1872 படிகள் உள்ளன. 3 இலட்சத்து 65 ஆயிரம் தொன்கள் எடை கொண்ட இக்கட்டடத்தில் பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பிகளின் எடை மட்டும் 57 ஆயிரம் தொன்கள். ஐந்து நுழைவாயில்கள், 73 மின்தூக்கிகள் (லிப்ட்), 6500 ஜன்னல்கள் உடையது. மொத்த தளப் பரப்பு 2,768,591 சதுர அடிகள்.

ஆர்ட் டெகோ என்கிற பாணியில் கட்டப்பட்ட இதன் வடிவமைப்பாளர் ஆலன் லாம்ப்க்கு 1931 ஆம் வருடம் சிறந்த ஆர்க்கிடெக்ட் விருது அமெரிக்க கட்டடக் கலை நிபுணர்கள் சங்கத்தினரால் வழங்கப்பட்டது.

ஜான் ரஸ்காப் தலைமையிலான குழு இந்த கட்டடத்தைக் கட்டி முடித்தாலும் வளாகத்தின் பல அலுவலகங்கள், கடைகள் எதிர்பார்த்த அளவு வாடகைக்குப் போகவில்லை.

எம்பயர் ஸ்டேட் கட்டடம்

எனவே 1951 ஆம் வருடம் ரோஜர் ஸ்டீவன்சன் என்பவர் தலைமையில் இருந்த குழுவிடம் 34 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டது.

(தொடரும்)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2486

விநோத்

ஏழைக்கு உணவு 'தட்டுப்பாடு'
பணக்காரனுக்கு உணவு 'கட்டுப்பாடு'

சதுஸ்ரிகன்

எனக்கென்னமோ 2022 மாதிரியே தெரியல!
ஊ ஊ ங்கிற மாதிரியே தெரியுது!

கவின்

போன்ல பேசும் போது சரியா? சரியா?
அப்படின்னு கேட்டா அவ காதலி...

அதுவே புரிஞ்சுதா? புரிஞ்சுதா?
அப்படின்னு கேட்டா அவ பொண்டாட்டி...

யுகதேவி

நான் தான் பாம்பு இல்ல நான் தான் பாம்பு

அப்ப நாங்க எல்லாம் யாருடி?

சைத்தன்யா

ரீச்சர்- கொஸ்டின் பேப்பர்ல ஏதும் எழுதக் கூடாது.

அட இவன் வேற ஆன்ஸ்சர் பேப்பர்லயே என்னத்த எழுதுறதுன்னு தெரியல

விபுயா

காதலிச்சு கல்யாணம் பண்றத விட
கல்யாணம் பண்ணிட்டு காதலிச்சா
வாழ்க்கை நல்லாயிருக்கும்னு
பெரியவங்க சொல்லியிருக்காங்க...
பெரியவங்க சொன்ன மாதிரி
கல்யாணம் பண்ணிட்டு யாரையாவது
காதலிக்கலாம்னு பார்த்தா...
பொண்டாட்டிக்காரி ஒத்துக்கவே மாட்டேங்குறா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான வீடியல் 273

வலம்புரிமின் மருத்துவச்சுடர்

நீரிழிவு உள்ளவர்கள் சுவையாக உண்ண...

நீரிழிவு நிலை உள்ளவர்கள் உண்ணக்கூடிய ஆரோக்கியமான உணவு வகைகள் உண்மையிலே அனைவருக்குமே பொருத்தமான ஒரு ஆரோக்கிய உணவு முறையாக அமைந்திருக்கிறது. இந்த உணவு வகைகளை சுவை நிறைந்ததாக சமையல் செய்து உண்பது மனதுக்கும் உடலுக்கும் புத்தூக்கத்தை கொடுத்து மனிதனின் ஆரோக்கியத்தை வளர்க்க உறுதுணையாக அமையும்.

சுவையாக எவற்றை உண்ண முடியும்?

முட்டை, பால், கோழி இறைச்சி, மீன், இறால், தயிர், மோர் போன்றவை அதிக புரதத்தையும், விற்றமின்கள், கனியுப்புக்களையும் கொண்டவை. இவற்றை உங்களுக்குப் பிடித்த சுவையான வடிவத்தில் தயார் செய்து உண்ண முடியும்.

சமையலின் பொழுது வாசனைத் திரவியங்கள, போதியளவு உறைப்பு, புளி, மஞ்சள், இஞ்சி, சீரகவகைகள், வெந்தயம், மல்லி போன்றவற்றை வேண்டிய அளவில் சேர்த்துக் கொள்ள முடியும். இவை உடல் நலத்திற்கு நன்மை பயப்பவையாக அமைவதுடன் உணவின் சுவையையும் அதிகரிக்க உதவும்.

மரக்கறி வகைகளை தெரிவு செய்யும் பொழுது வெவ்வேறு வர்ணங்களில் காணப்படும் பலவகை மரக்கறி வகைகளை மாறிமாறி தெரிவுசெய்ய வேண்டும். அப்பொழுது தான் எல்லா வகையான ஊட்டச்சத்துக்களும் எமக்கு கிடைக்கும்.

பூசணி, கரட், பீற்றூட், முள்ளங்கி உட்பட அனைத்து வகையான மரக்கறி வகைகளையும் பயன்படுத்த முடியும்.

நீரிழிவு நிலை உள்ளவர்கள் பழ வகைகளை உண்ண முடியாது என்ற ஒரு தப்பபிப்பிராயம் நிலவுகிறது. இது முற்றிலும் தவறானது.

அன்னாசி, விளாம்பழம், பப்பாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்புப் பழம், வாழைப்பழம், வத்தகப்பழம், தோடம்பழம், மாதுளம்பழம், நாவற்பழம் போன்ற பழவகைகள் சுவையும் ஊட்டச்சத்துக்களும் நிறைந்தவை. இவற்றை போதிய அளவில் உண்ணமுடியும்.

பழங்கள் உண்ணும் பொழுது குருதிக் குளுக்கோஸின் அளவு சற்று அதிகரித்தாலும்கூட இவற்றை உண்ணுவதால் ஏற்படும்

அனுகூலங்கள் பல மடங்கு அதிகமாகும். பழச்சாறுகளில் வெல்லத்தின் செறிவு அதிகமாகும். நார்த்தன்மை குறைவாகவும் இருப்பதுடன் பசியைக் கட்டுப்படுத்தும் வீதமும் குறைவாக இருக்கிறது. எனவே பழங்களை பழச்சாறாக மாற்றி குடிப்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்ததாகும்.

கொட்டை வகைகளான கச்சான், கடலை, மரமுந்திரிகை (கயூ), பொட்டுக்கடலை போன்றவை உடல் ஆரோக்கியத்தை வளர்க்க உதவும். எனவே இவற்றை இடை நேரத்தில் தேநீருடன் உண்ணமுடியும். புரதச்சத்து அதிகமுள்ள பயறு, உழுந்து, சோயா, கௌப்பி, பருப்பு வகைகள் போன்றவை சுவைபட போதிய அளவில் சமைத்து உண்ண முடியும்.

உணவு முறையில் எந்த வகையான மாற்றங்கள் செய்ய முடியும்?

மாப்பொருள் செறிவு அதிகமுள்ள அரிசி, கோதுமை, ஆட்டாமா, குரக்கன் போன்றவற்றை பயன்படுத்தி செய்யும் உணவு வகைகளை குறைத்துக் கொள்வது நல்லது. காரணம் இவை சமிபாடு அடையும் பொழுது அதிகளவு குளுக்கோஸ் உண்டாகின்றது.

ஒப்பீட்டளவில் தீட்டாத அரிசிமா, குறைவாக தீட்டப்பட்ட குத்தரிசி, உழுத்தம்மா, பயற்றம்மா போன்றவற்றில் செய்யப்படும் உணவு வகைகள் வெள்ளை நிற அரிசி வகைகள், வெள்ளைநிற மாவகைகளில் செய்யப்படும் உணவுகளிலும் பார்க்க சிறந்தவையாகும்.

மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை உண்ணும் பொழுது உணவுக் கோப்பையில் அரைப்பங்கு இலைவகைகள், மரக்கறி வகைகளால் நிறைந்திருப்பது அவசியமாகும்.

உணவிலே சீனி, சர்க்கரை, பனங்கட்டி, குளுக்கோசு போன்றவற்றை தவிர்த்து அவற்றிற்குப் பதிலாக தேவை ஏற்படின் இனிப்புச் சுவையுள்ள இனிப்பூட்டிகளை பயன்படுத்துவது நல்லது.

இந்த இனிப்புச்சுவையுடைய இனிப்பூட்டிகள் உடல் நிறையையோ அல்லது குருதி குளுக்கோஸின் அளவையோ அதிகரிக்க மாட்டாது.

எண்ணெய், பட்டர், கொழுப்பு என்பன அதிகமுள்ள பொரித்த உணவு வகைகளுக்குப் பதிலாக "பக்" செய்யப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்வது நல்லது.

உப்பை முற்றாக தவிர்த்து விட வேண்டும் என்றஅவசியம் இல்லை. அளவான உப்பு சேர்த்து சுவையாக சமையல் செய்ய முடியும்.உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை தவிர்த்து விடுவது நன்மை பயக்கும் அளவுக்கு அதிகமான உப்பு வகைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

உணவுமுறை சம்பந்தமான சில தகவல்கள்

அதிகளவு பழவகைகளையும், மரக்கறி வகைகளையும் உண்பது எம்மை மாரடைப்பு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், நிறை அதிகரிப்பு, கொலஸ்ரோல் அதிகரிப்பு போன்ற நோய் நிலைகளிலிருந்து பாதுகாக்கும்.

வீட்டின் அன்றாட பாவனைக்கு சிறிய உணவுக் கோப்பைகளையும், சிறிய தேநீர் பேணிகளையும் பயன்படுத்துவோம். இது நாம் மேலதிகமாக உண்பதை தவிர்க்க உதவும்.

சோறு, பிட்டு போன்றவற்றை பரிமாறு வதற்கு சிறிய கரண்டிகளையும் மரக்கறி வகைகளை பரிமாறுவதற்கு பெரிய கரண்டிகளையும் பயன்படுத்துவோம்.

உணவை ஆறுதலாக சுவைத்து ரசித்து உண்ணும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒரே வகையான உணவில் அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களும் அடங்கி இருக்காது. எனவே நாம் உண்ணும் உணவின் வகைகளை மாற்றிக் கொள்வது பயன்தரும்.

உள்ளூரிலே உற்பத்தியாகும் இயற்கையான உடன் உணவு வகைகளை தெரிவு செய்வது பல வழிகளிலும் நன்மை பயக்கும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org